பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 05 சனிக்கிழமை 22.10.2022 கதிர் 349

**இனி இது ரகசியம் அல்ல!**

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி போல' 22 ஆவது அரசமைப்புத் திருத்த விடயத்தில் பஸில் ஆதரவு அணி நடந்து கொண்டு, தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுள்ளது.

22 ஆவது திருத்தச் ☞2

## நினைத்ததைப் பெரு வெற்றியுடன் சாதித்த ரணில்

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 22 ஆம் திருத்தச் சட்டம் நிறைவேற்றம்

* 179 பேர் ஆதரவு; சரத் வீரசேகர மட்டும் எதிர்ப்பு
* சமல், நாமல் பச்சைக்கொடி; மஹிந்த நழுவல்
* சாகர, ஜோன்ஸ்டன், ரோஹித, பிரசன்ன உள்ளிட்ட பஸிலின் சகாக்கள் மாயம்



கொழும்பு,ஒக். 22

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டத்துக்கு ஆதரவாக 179 வாக்குகள் அளிக்கப்பட்டன. அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்த 'மொட்டு'க் கட்சி எம்.பி. சரத் வீரசேகர, 22 இற்கு எதிராகவும் வாக்களித்தார். ☞2

## 22 இற்கான முழு உரித்தும் மக்கள் போராட்டத்துக்கே!

### சபையில் சஜித் சுட்டிக்காட்டு



அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்தின் பூரண உரிமைகளும் மரியாதைகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தப் பிரஜைகளுக்குமே வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் ☞2

## கூட்டமைப்பில் 6 பேர் ஆதரவு; சுமந்திரன் பங்கேற்கவில்லை

### சம்பந்தன், வினோவுக்குச் சுகயீனம்; சாணக்கியன் நாட்டுக்கு வெளியில்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக் களித்தனர்.

அரசமைப்பின் 22ஆவது திருத்தச்சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று 178 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மாலை வாக்கெடுப்பு ☞13

## 400 ஜெலிக்னைற்றுகள் கச்சதீவில் கண்டுபிடிப்பு

இந்தியாவில் இருந்து கடல்வழியாக யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த 400 ஜெலிக்னைற் வெடி மருந்து குச்சிகளை நேற்று முன்தினம் கடற்படையினர் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என ஊர்காவல்துறை பொலிஸார் ☞2

## பாடசாலை தவணைக் காலம் விடுமுறைகள் பற்றி அறிவிப்பு

எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதியுடன் இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை கற்கைகள், நிறைவடையவுள்ளன எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. டிசம்பர் 2ஆம் திகதி ஆரம்பிக்கும் இரண்டாம் தவணை விடுமுறை, 4ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக ☞13

## வரவு - செலவுத் திட்டம் 8 ஆம் திகதி சமர்ப்பிப்பு

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரை ☞13

## பரீட்சைகளின் திகதிகள் அறிவிப்பு

2022 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படும் திகதி குறித்து கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி நடத்துவதற்குத் ☞2

## கதிர்காமத்தில் முதலையிடம் சிக்கி வயோதிப மாது சாவு!

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடசென்ற 75 வயதுடைய பெண், முதலை தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது முதலை நீரில் இழுத்துச் சென்றுள்ளது.

பொலிஸ், இலங்கை இராணுவம் மற்றும் வனவிலங்கு அதிகாரிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

செல்ல கதிர்காமப் ☞13

## காங்கேசன்துறையில் ஹயஸ் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது!




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.22

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பகுதியில் நேற்று இரவு 9 மணிக்கு பயணித்த ஹயஸ் ☞13

# வடக்கில் சீனாவால் சிக்கல்; உடனே கட்டுப்படுத்துங்கள்!

### அரசிடம் சுரேஷ் அவசர கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஒக்.22

சீனாவினால் ஏற்படவிருக்கும் ஆபத்து குறித்து இனியாவது அவதானம் செலுத்துங்கள் அரசாங்கத்தைக் கோருகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் சீனாவை அனுமதித்துள்ளமை ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட வரைவை அரசு தரப்பு நாடாளுமன்றில் சமர்ப்பித்த போது அதை ஒன்றுபட்டு எதிர்க்கும் மனநிலையிலேயே எதிர்க்கட்சிகள் இருந்தன. அப்படிப் பகிரங்கமாக அறிவித்தும் இருந்தன.

ஆனால் ஆளும் கட்சிக்குள் இருக்கும் பஸில் ஆதரவாளர்கள் அந்தத் திருத்தம் பஸில் ராஜபக்ஷ என்ற தனி மனிதரை இலக்கு வைத்துக் கொண்டு வரப்படுவதாகக் குற்றம் சுமத்தி, அதற்கு எதிராகக் கிளர்ந்தனர்.

22 ஆம் திருத்தத்தை எதிர்ப்பதன் மூலம் பஸில் ராஜபக்ஷவை அரசியலில் இருந்து ஒதுக்கும் அரசுத் தரப்பின் முடிவை முறியடிப்போம் என பஸில் ஆதரவாளர்கள் அணி புறப்பட்டதும், அதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தன. கடைசியில் அந்த ஒன்றிணைவு அரசுக்கு 22 ஆவது திருத்தத்தை வெற்றிகரமாக - சுலபமாக - நிறைவேற்ற உதவியாகி இருக்கின்றது.

பஸில் ஆதரவு அணியைப் பொறுத்த வரை, 22 ஆவது திருத்தத்தை எதிர்க்கிறோம் என்று அது சும்மா சவடால் பேச்சுப் பேசியமையினால் எதிர்க்கட்சிகள், முன்னர் அந்த 22 ஆவது திருத்தத்தை ஆட்சேபிப்பது என்ற தமது முடிவை மாற்றி, தமக்குள் ஒன்று சேர்ந்து, ஒற்றைக் காலில் நின்று, அந்த 22 ஆவது திருத்தத்தை பெருவெற்றியாக நிறைவேற வழி செய்திருக்கின்றன.

சரியோ, பிழையோ 22 ஆவது அரசமைப்பு திருத்தம் சட்டபூர்வமாக நிறைவேறிவிட்டது.

அதன்படி இரட்டை பிரஜாவுரிமை வைத்திருக்கும் பஸில் ராஜபக்ஷ இலங்கையில் இனிமேல் அரசியல் செய்வது துர்லபமே.

22 ஆவது திருத்தத்தை ரணில் யாருமே எதிர்பாராத விதத்தில் வலிமையானதாக நிறைவேற்றச் செய்தமை மூலம் தனது அரசியல் பிடியை ஸ்திரமாக்கிக் கொண்டிருக்கிறார் என்றே கூற வேண்டும்.

ஆளும் பொதுஜனபெரமுனவுக்குள் பஸிலின் பிடி தளர்ந்து வருவதை நேற்றைய அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு உறுதிப்படுத்தி நிற்கின்றது.

பொதுஜன பெரமுனவுக்குள் இனிமேல் பஸிலின் பிடி வளருவதற்கான வாய்ப்பு இப்போதைக்கு இல்லை என்ற உண்மையை இந்த 22 ஆவது திருத்த நிறைவேற்றம் உறுதி செய்து உள்ளது.

***

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் மீதான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் வாக்களித்த முறைமை அந்தக் கூட்டமைப்பின் உள் கட்சி நிலைமையை ஓரளவுக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

சுமந்திரன் எடுக்கும் நிலைப்பாட்டுக்கு மாறான போக்கில் செயற்படுவதற்கு கூட்டமைப்பின் மற்ற எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர் என்பதையே அரசமைப்பு திருத்தத்தை ஒட்டிய நேற்றைய வாக்களிப்பில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் நடந்து கொண்ட முறைமை காட்டுகின்றது.

இது கூட்டமைப்பின் ஆரோக்கியமான மேம்பாட்டுக்குத் தெம்பு தருவதாக இல்லை என்றே தோன்றுகின்றது.

- மின்னல் -

## மூன்றில் இரண்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட 44 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அதற்கு ஆதரவாக 179 பேர் வாக்களித்தனர். சரத் வீரசேகர எதிர்த்து வாக்களித்தார். திருத்தங்களை உள்வாங்கிய பின்னர் குழுநிலையின் போது (மூன்றாம் வாசிப்பு) ஆதரவாக 174 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் 22 ஆவது திருத்தச் சட்டம் திருத்தங்கள் சகிதம் நிறைவேற்றப்பட்டது என்று சபாநாயகர் அறிவித்தார்.

குறித்த சட்டத்தில் சபாநாயகர் கையொப்பமிடும் நாளில் இருந்து, அது அமுலுக்கு வரும்.

'22' ஆவது திருத்தச் சட்டம் என விளிக்கப்பட்டிருந்தாலும் அரசமைப்புக்குள் அது 21 ஆவது திருத்தச் சட்டமாக உள்வாங்கப்படும்.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்குத் தடை விதிக்கும் ஏற்பாடு 19 இல் இருந்த நிலையில், 20 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக அது இல்லாமல் செய்யப்பட்டது. எனினும், 22 ஆவது திருத்தச் சட்டத்துக்குள் அந்த சரத்து மீண்டும் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதற்கு 'மொட்டு'க் கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இரட்டைக் குடியுரிமை உடைய பஸில் ராஜபக்ஷவை இலக்கு வைத்த நகர்வே இதுவெனவும் கூறப்பட்டது. எனினும், அந்தச் சரத்து நீக்கப்படவில்லை.

ஆனால், பஸிலின் சகாக்களான சாகர காரியவசம், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன, சஞ்சீவ எதிரிமான்ன , பிரசன்ன ரணதுங்க, பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்ட எம்.பிக்கள் நேற்றைய வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ வராவிட்டாலும் சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் ஆதரவாக வாக்களித்தனர்.

நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமான நாளில் இருந்து நான்கரை வருடங்களுக்குப் பிறகே ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற ஏற்பாடு 19 இல் உள்வாங்கப்பட்டது. அந்தக் கால எல்லை '20' இல் இரண்டரை வருடமாக்கப்பட்டது. '22' இலும் இரண்டரை வருடம் என்ற ஏற்பாடு உள்ளது.

அதற்கமைய தற்போதைய ஜனாதிபதிக்கு இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் 2023ஆம் ஆண்டு மார்ச்சில் கிட்டுகின்றது.

அரச சேவையில், அரசியல் தலையீடுகளைத் தவிர்த்து, சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பிரதான நோக்கில் உருவாக்கப்பட்ட அரசமைப்பு பேரவை, '20' ஊடாக நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக நாடாளுமன்ற பேரவை ஸ்தாபிக்கப்பட்டது. எனினும், 22 ஊடாக அரசமைப்பு பேரவை மீண்டும் ஸ்தாபிக்கப்படவுள்ளது. சிவில் பிரதிநிதிகள் இடம்பெறும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை மேற்படி பேரவையே ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கும்.

மத்திய வங்கி ஆளுநர் நியமனம்கூட அரசமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே இடம்பெறவேண்டும்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகவும், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆகவும் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு '19' இல் இருந்தது. '20' இலும் அந்த ஏற்பாடு காக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட '22' இலும் அது தொடர்கின்றது.

22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டார். இழுத்தடிப்புச் செய்த 'மொட்டு'க் கட்சிகளுடன் பல சுற்றுப் பேச்சுகளை அவர் நடத்தினார். இந்த விடயத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக முக்கிய பங்கை வகித்தார்.

## 22 இற்கான முழு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 22 ஆவது திருத்த விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

69 லட்சம் ஜனாதிபதி ஆணையும், 68 லட்சம் பொதுத் தேர்தல் ஆணையும் கருத்திற்கொள்ளப்படாது தன்னிச்சையான அபிப்பிராயங்களை அடிப்படையாகக் கொண்டு கடுமையான முடிவுகளை எடுத்தமையால் ஒரு மக்கள் போராட்டம் ஏற்பட்டது. இதன் விளைவாக, ஏழு மூளை இருப்பதாகச் சொன்ன நிதி அமைச்சரும், பெரும்மன்னர் எனச் சொன்ன பிரதமரும், எதேச்சதிகார ஜனாதிபதியும் அவர்கள் அடிமைக் கூட்டமும் ஓடிச் சென்றனர். அதன் காரணமாகவே 22 ஆவது அரசமைப்புத் திருத்தம் பேசுபொருளாகி முன் வந்தது.

இதன் பிரகாரம், 22 ஆவது திருத்தச் சட்டத்தின் பூரண உரிமைகளும் மரியாதைகளும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரஜைகளுக்குமே வழங்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் 225 பேருக்கு சிறப்புரிமைகள், சலுகைகள் வழங்கப்படுவது போலவே 225 லட்சம் மக்களுக்கும் சிறப்புரிமைகள், சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

22 ஆவது திருத்தம் என்பது முழுமையான அரசமைப்புத் திருத்தம் இல்லையென்றாலும், அதன் முக்கிய காரணிகள் மீதான நம்பிக்கையினாலும், நாடு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு, சர்வதேச சமூகத்துக்கு இது சாதகமானதொரு நேர்மையான சமிக்ஞையைக் கொடுக்கும் என்ற உணர்வினாலும், மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் நான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி இதற்கு ஆதரவளிக்கின்றோம் - என்றார்.

## 400 ஜெலிக்னைற்றுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் சம்பவதினமான நேற்று முந்தினமும் மாலை 6 மணியளவில் கச்சதீவிற்குச் சென்ற கடற்படையினர் அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 400 ஜெலினைற் வெடி மருந்துக் குச்சிகளை மீட்டனர்.

இதேவேளை இந்த தீவில் மனிதர்கள் வாழுவதில்லை. அங்கு இந்தியாவில் இருந்து கடல்வழியாக இந்த வெடிபொருள்களை கொண்டுவராப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட நிலையில் கடற்படையினர் மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சைகளின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், க.பொ.த. உயர்தரப் பரீட்சையை அடுத்த வருடம் (2023) ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## வடக்கில் சீனாவால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று இலங்கை அரசாங்கத்தை எச்சரித்துள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் இந்தோ - பசிபிக் பிரதேசத்திலும் அமைதியையும் சமாதானத்தையும் பேணுவதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ள சுரேஷ், சீனாவின் வல்லாதிக்க போட்டிக்கு இலங்கையை பயன்படுத்த இடமளிக்க வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம், இலங்கைக்குள் சீனாவின் முதலீடுகள் தொடர்பாகவும் சீனாவின் ஊடுருவல்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்பது தொடர்பாகவும் பலமுறை சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

இறுதி யுத்த காலத்தின்பொழுது, யுத்தத்தை நடாத்தி முடிப்பதற்காக, பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான இராணுவ தளபாட உதவிகளை சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரசு பெற்றுக்கொண்டது. அதற்குக் கைமாறாக இலங்கையில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் சீனாவிற்குக் கதவைத் திறந்துவிட்டது. அது மாத்திரமல்லாமல், இலங்கையைக் கடன் பொறிக்குள் தள்ள வேண்டும் என்ற அடிப்படையில், வர்த்தகரீதியில் எவ்வித பெறுமானமும் அற்ற ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் போன்றவற்றிற்கும் சீனா பல ஆயிரம் டொலர்களைக் கடனாக வழங்கியது. இப்பொழுது அடுத்த நூறு வருடங்களுக்குத் தனது பிடிமானத்தை இலங்கையின்மீது இறுக்கியிருக்கிறது.

(13ஆம் பக்கம் பார்க்க)




V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

Search Facebook
V2 Travels and Tours

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

0768226244
0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ஏன் இந்த அரசமைப்பு திருத்தம்?

**இலங்கையின் அரசமைப்புத் திருத்தத் திருவிழா இன்னொரு கட்டத்தைத் தாண்டி இருக்கின்றது. இதற்குள் அவதானிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சம் உள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தின் போக்குக் குறித்தும் கவனிக்கப்பட வேண்டிய ஒரு கருத்தியலும் பொதிந்துள்ளது.**

**அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 17, 18, 19, 20, 22 ஆம் திருத்தங்கள் எல்லாம் ஒன்றுக்கொன்று முரணானவை. 17 இல் கொண்டுவரப்பட்டவற்றை 18 மாற்றியது. மீண்டும் 17 ஐ ஒட்டிய நிலைமையை 19 கொண்டு வந்தது. 19 இல் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை 20 புரட்டிப் போட்டது. இப்போது 20 தின் நிலைப்பாட்டில் பலவற்றை 'ரிவர்ஸ்' பண்ணியிருக்கின்றது 22 ஆவது திருத்தம்.**

**இப்படி மாறி மாறி ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு வாக்களித்த எம்.பிக்களின் பட்டியலை ஒழுங்குபடுத்திப் பார்த்தீர்களானால் ஒரே அணியினரே இந்த குளறுபடிகளுக்கு எல்லாம் காரணமாக இருந்தமையையும் அவதானிக்க முடியும்.**

**முன்னைய தமிழர் விடுதலைக் கூட்டணி – இப்போதைய தமிழ்க் கூட்டமைப்பு – தரப்பே ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரங்களை வெட்டி குறைத்த 17,19,22 ஆவது திருத்தங்களுக்கு ஆதரவாகவும் நிறைவேற்றதிகாரங்களை ஜனாதிபதி வசம் குவிக்கும் 18, 20 ஆம் திருத்தங்களுக்கு எதிராகவும் தெளிவான நிலைப்பாட்டை எடுத்து வாக்களித்திருந்தது. இது சரித்திரம்.**

**தென்னிலங்கை நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணாக 'ஆயாராம், காயாராம்' அரசியல் செய்தமைக்கு ஒரு நியாயப்பாடு கற்பிப்பார்கள்.**

**அந்தந்தக் காலகட்டங்களில் மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் அத்தகைய கருத்தியலை வெளிப்படுத்தினார்கள், நாங்கள் அந்த ஆணைகளையே பிரதிபலித்தோம், மஹிந்தவை ஆதரித்த மக்கள் மாறாக மைத்திரியை ஆதரித்த போது, அதற்கேற்ப அரசமைப்புத் திருத்த மாற்றத்திற்கும் நாங்கள் இணங்கினோம். பிறகு அதே மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவை பெரு வெற்றி அளித்துப் பதவியில் அமர்த்திய போது அந்தத் தலைமைத்துவம் ஊடாக மக்கள் சொன்ன செய்திக்கு ஏற்பவும் நாம் செயல்பட்டோம் என்பது அவர்கள் விளக்கம்.**

**அது ஒரு வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். அதுமட்டுமல்ல, 17, 20 ஆம் திருத்தங்கள் வெவ்வேறான நாடாளுமன்றங்களினால்தான் சட்டங்களாக்கப்பட்டன. ஆயினும் 18, 19 ஆம் திருத்தங்கள் ஒரே நாடாளுமன்றத்தினால் செய்யப்பட்டன. எனினும் ஜனாதிபதித் தேர்தலில் நிகழ்ந்த அதிரடி மாற்றம், அதையடுத்து நிகழ்ந்த அரசு மாற்றம் ஆகியவற்றின் பின்புலத்திலேயே 18க்கு மாறான 19 அதே நாடாளுமன்றினால் நிறைவேற்றப்பட்டது. அந்த வகையில் மக்களின் மனநிலை மாற்றத்திற்கு ஏற்ப இந்த மாற்றங்கள் என்று அவற்றை ஓரளவுக்கு நியாயப்படுத்தலாம்.**

**ஆனால் இப்போதைய 20 ஐயும், 22ஐயும் – ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபடும் தலைகீழான இரண்டு அரசமைப்புத் திருத்தங்களையும் – ஒரே நாடாளுமன்றமே முன்னெடுத்திருக்கின்றது. இவை இரண்டுக்கும் இடையில் மக்கள் தீர்ப்பை –ஆணையை –வெளிப்படுத்தும் வாக்களிப்போ, தேர்தலோ நடக்கவுமில்லை.**

**அப்படிப் பார்த்தால், இது, 'அறகலய' போராட்டத்தின் – மக்கள் எழுச்சியின் – பயத்தின் விளைவுதான்...!**

# அரசியல் கட்சிகளிலும் திருத்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்!

## அமைச்சர் நிமல் சிறிபால கோரிக்கை



அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவது போன்று அரசியல் கட்சிகளின் யாப்பிலும் தித்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

இல்லாவிட்டால் கட்சியின் ஒருசிலரின் சப்பாத்துக்காலுக்கு நசுக்கப்படும் நிலையே ஏற்படுகின்றது.

ஏனெனில் கட்சியின் தீர்மானம் எதுவாக இருந்தாலும் சுயாதீனமாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை யாருக்கும் இருக்கவேண்டும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

இரட்டை பிரஜா உரிமை இருப்பவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகின்றமை, ஜனாதிபதி பதவி வகிப்பது மற்றும் நாட்டில் உயர் பதவிகளுக்கு நியமிப்பதற்கு முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆரம்பத்தில் இருந்தே இருந்து வருகின்றது.

அதனால்தான் மத்திய வங்கி ஆளுநராக அர்ஜுன் மஹேந்திரனை நியமிப்பதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். என்றாலும் தற்போது 22 ஆவது திருத்தத்தில் அந்த திருத்தங்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று தேர்தல் மறுசீரமைப்பும் அவசியம். விருப்புவாக்கு முறை இல்லாமலாக்கப்படவேண்டும். என்னைப் பொறுத்தவரை விருப்புவாக்கு முறை நல்லது. ஏனெனில் நான் இந்த முறையில் 6 தடவைகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி இருக்கின்றேன்.

என்றாலும் எனது சுயநலத்தை விட்டுக் கொடுத்து, தொகுதிக்கு பொறுப்புக்கூறக் கூடிய மக்கள் பிரதிநிதிகள் தெரிவுசெய்யும் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். அதனால் யாருக் கும் செய்ய முடியாத தேர்தல் முறை திருத் தத்தை, மக்கள் விருப்பு வாக்கெடுப்பு நடத்தியாவது ஜனாதிபதி செய்யவேண்டும்.

மேலும் அரசமைப்பு மூலம் மக்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும். மாற்றத்தை ஏற்படுத்தவே மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இறுதியில் அரசியல் பயங்கரவாதம் தலைதூக்கி நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்தியது. 20 ஆவது திருத்தத்தில் அரசியல் கட்சிகளின் கொள்கைக்கு ஏற்றவாறு செயற்பட முடியாத நிலைமை இருந்தது. அதனால் கட்சியைப் பாதுகாத்துக்கொண்டே செயற்படவேண்டி இருந்தது.

அத்துடன் அரசமைப்பு திருத்தம் மேற்கொள்வது போன்று அரசியல் கட்சிகளின் யாப்பிலும் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஏனெனில் கட்சி ஒரு தீர்மானத்தை மேற்கொண்டால் அது தொடர்பிர் சுயாதீன மாக கருத்து தெரிவிப்பதற்கும் செயற்படவும் உரிமை இருக்கவேண்டும். அவ்வாறு செயற்படுபவர்களை கட்சியின் சில உறுப்பினர்களின் சப்பாத்துக் காலால் நசுக்கும் நிலையே இன்று இருக்கின்றது. அதனால் நாட்டின் ஜனநாயகம் தொடர்பாகக் கதைப்பதற்கு முன்னர் கட்சியின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவேண்டும். –என்றார்.

# அரிசி இறக்குமதியால் நெல் ஆலை உரிமையாளர்கள் பாதிப்படைவு!

வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதால் உள்ளூர் விவசயிகளிடம் நெல்லைக் கொள்வனவு செய்த நெல் ஆலை உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவிக்கையில் –

கடந்த அறுவடையின் போது விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்த ஆலை உரிமையார்கள் அதனை அரிசியாக்கி விற்பனை செய்ய முற்படும் போது வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதால் ஆலை உரிமையாளர்கள் மாத்திரமின்றி விவசாயிகளும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல்லை தற்போது அரிசி ஆலை உரிமையாளர்கள் குறித்த விலைக்கு விற்பனை செய்ய முடியாமையால் அரிசி ஆலைகளில் அரிசி தேங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கால போக செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் நெல் ஆலை உரிமையார்கள் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு முடியாத நிலை ஏற்படும் இது விவசாயிகளுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே அரசாங்கம் உள்ளூர் விவசாயதை மேம்படுத்தவும் உள்ளூர் வர்த்தகர்களை நட்டமடையாது பாதுகாக்கவும் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்வதைத் தடை செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு உதவ பிரிட்டன் தயார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பான விசாரணைகளிற்கு உதவுவதற்கு தயாராக உள்ளதாக பிரிட்டன் தெரி வித்துள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பிரிட்டனின் இராஜாங்க அமைச்சர் டொம் டுஜென்ஹட் இதனைத் தெரிவித் துள்ளார்.

விசாரணைகளிற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் – அந்த வேண்டுகோள் பொருத்தமானதாக சட்ட பூர்வமானதாக அவசியமானதாக காணப்பட்டால் – அதனை பரிசீலிக்கத் தயார் என பொதுச்சபைக்கு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் பாதிக்கப்பட்ட பிரிட்டிஸ் பிரஜைகளுக்கு உதவுவதற்காகவும் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் பிரஜைகளின் உடல்களை அனுப்புவதற்கு உதவுவதற்காகவும் மெட்ரோபொலிட்டன் பொலிஸின் பயங்கரவாத தடுப்பு பிரிவு தனது நிபுணர்களை இலங் கைக்கு அனுப்பியது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் உதவுவதற்காக மெட்ரோபொலிட்டன் பொலிஸார் இன்னமும் எவரையும் நியமிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பான உரிய விசாரணைகள் இடம்பெறாததால் இந்த விடயத்துக்கு இன்னமும் உரிய தீர்வு காணப்படவில்லை என கடந்த ஜுலையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

விசாரணைகள் பூர்த்தியடையாததால் நான் பிரிட்டனின் உதவியை நாடுவேன் என அவர் அவ்வேளை தெரிவித்திருந்தார்.

# பணவீக்க சூழ்நிலையில் இருந்து விடுபடுவதற்கு கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டும்!

## மத்திய வங்கி ஆளுநர் கருத்து



நாடு தற்போதைய பணவீக்க சூழ்நிலையில் இருந்து விடுபட கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் தனுஷ்க ராமநாயக்கவால் நடத்தப்பட்ட நேர்காணலிலேயே நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

வரி திருத்தங்கள், வட்டி விகித உயர்வு போன்றவை இவ்வாறு கடுமையாக எடுக்கப்பட்ட சில முடிவுகள் என்றும் அவர் குறிப்பிட்டார். இதன்போது, வரி சீர்திருத்தம் மற்றும் ஐ.எம்.எவ். செயன்முறை மூலம், எதிர்காலத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து முன்னேறுவதற்கு எங்களுக்கு ஏதாவது வழி இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா என ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் நாயகம் கேள்வி யெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஆளுநர், கடந்த காலத்தில் சமூக மற்றும் அரசியல் அமைதியின்மை இருந்தது என்றும் எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்கான வரிசைகள் இருந்தன என்றும் சுட்டிக்காட்டினார்.

அது வேலைத்திட்டத்தின் மூலம் தலைகீழாக மாறிவிட்டது என்றும் வரி மற்றும் நிதிக் கொள்கையில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் வரிக் கொள்கையை ஓராண்டுக்கு அமுல்படுத்தினால், நாம் எதிர்பார்த்ததை விட வரி வருவாய் அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிக வருமானம் உள்ளவர்கள் அதிகம் பங்களிப்பார்கள் என்றும் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அதிக வருமானம் உள்ளவர்கள் பங்களித்தால் அனைவருக்கும் வரிச் சலுகை அளிக்கலாம் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் குழந்தைகளின் உயிரிழப்புக்கு காரணமான மருந்து இலங்கையில் இல்லையாம்!

## மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு

இந்தோனேசியா மற்றும் காம்பியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளின் உயிரிழப்புக்குக் காரணமான மருந்து திரவங்கள் இலங்கையில் பயன்பாட்டில் இல்லை என்று தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்து கட்டுப்பாட்டு அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடுமையான விதிமுறைகளைக் கருத்திற்கொண்டு உயர்தர மருந்துகளை மாத்திரமே இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொருளாளர் மஞ்சுள ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம், காம்பியாவில் ஒரு வகை இருமல் மருந்து காரணமாக 70 குழந்தைகள் உயிரிழந்தன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. பின்னர் இந்தோனேசியாவில் சிரப் மற்றும் மருந்து திரவங்களால் சுமார் நூறு குழந்தைகள் உயிரிழந்தன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேசிய அதிகாரிகள் நடத்திய சோதனையில், சிரப் ஒன்றில் சிறுநீரகத்துக்கு தீங்கு விளைவிக்கும் ரசாயனம் கலந்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்த மருந்தைப் பெற்ற 200 குழந்தைகளைப் பரிசோதித்ததில் அவர்களுக்கு சிறுநீரக கோளாறு இருப்பது கண்டறியப்பட்டதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

# கோணேஸ்வரம் ஆலய பகுதியை ஆக்கிரமிப்பு தென் எருவில் பற்று பிரதேசசபையில் கண்டனம்

திருகோணமலை, ஒக். 22

திருகோணமலை கோணேஸ்வரம் பகுதியை அபகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் அமர்வு நேற்று (வியாழக்கிழமை) பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது திருக்கேணஸ்வரர் ஆலய பகுதியைப் பெரும்பான்மை சமூகத்தால் சூறையாட முன்னெடுக்கும் செயற்பாடுகளைக் கண்டித்தும் அதனைத் தடுத்து நிறுத்துமாறும் கோரும் பிரேரணை அனைத்து கட்சி ஆதரவுடனும் தவிசாளரால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதோடு அனைத்து உறுப்பினர்களும் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்ததற்கு அமைவாக அனைவரின் ஆதரவுடனும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்றன. அத்துடன் பல்வேறு கருத்துமுரண்பாடுகளும் ஏற்பட்டதுடன் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டமை குறிப்பிடதக்கது.



# தமிழ் பிரதேசங்களில் பொலிஸார் தமது கடமைகளை செவ்வனே செய்வதில்லை!

## கலையரசன் எம்.பி. குற்றச்சாட்டு



தமிழ் பிரதேசங்களில் பொலிஸார் தமது கடமைகளை செவ்வனே செய்வதில்லை. இலஞ்சம் ஊழலுக்குள் அவர்கள் அகப்பட்டு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் விடயங்களில் ஒதுங்கி நிற்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதன் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் அதிகமான இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் இங்கு வாழும் இளைஞர்களை போதைப்பொருளால் அழிக்கும் முயற்சி திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றது.

இதனை நிறுத்தவேண்டிய பொறுப்பு ஆரம்பத்தில் பெற்றோர்களுக்கு இருந்தாலும் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளது. ஆகவே பொலிஸார் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இந்த நிலையில் நிலையில்லாமல் இருக்கும் அரசு தங்களது ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என செயற்படுகிறதே தவிர தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கும் சில விடயங்களை பேச்சளவில் பேசினாலும் நடைமுறையில் இல்லாத சூழல் உள்ளதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறான சூழலில் ஆலையடிவேம்பு பிரதேச சபை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆட்சியின் கீழ் இல்லாமையும் இங்கு பலவீனமான அரசியல் இடம் பெறுவதற்குக் காரணமாகும்.

ஆகவே சமூகத்தின்பால் அக்கறை கொண்ட நல்லதொரு பிரதேச சபையை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும்.' - எனத் தெரிவித்துள்ளார்.

# பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருள்களின் விலை குறையாதாம்!

பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருள்களின் விலைகளைக் குறைக்க முடியாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோதுமை மா கிலோ ஒன்றின் மொத்த விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் வெதுப்பகப் பொருன்களின் விலைகளைக் குறைக்க முடியாது என அந்தச் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலை 270 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட போதே பாணின் விலையை தாங்கள் அதிகரித்தோம் என்றும் கோதுமைமாவின் விலை 400 ரூபாவாக உயர்த்தப்பட்ட போதிலும் பாண் இறாத்தல் ஒன்றின் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். 400 ரூபா என்ற ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலையை 100 ரூபா வால் குறைப்பதால் பாணின் விலையை குறைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாண் மற்றும் பணிஸ் ஆகியவற்றின் விலைகளை குறைக்க வேண்டுமாயின் கோதுமை மாவை விநியோகிக்கும் இரண்டு பிரதான நிறுவனங்கள் கோதுமையின் விலையை குறைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# நல்லூர் மந்திரி மனையின் புனரமைப்பு பணி ஆரம்பம்!



தமிழர் மரவுரிமைச் சின்னங்களை அதன் தனித்துவம் மாறாமல் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண மரவுரிமை மையமானது வரலாற்றுத் தொன்மை மிக்க நல்லூர் இராஜதானி காலத்தை நினைவுபடுத்தும் மந்திரிமனையினைப் புனரமைக்கும் பணியினை ஆரம்பித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியுடனும், அனுமதியுடனும், நன்கொடையாளர்கள் மூலம் யாழ்ப்பாண மரவுரிமை மையத்திற்கு கிடைத்த நிதியில் நல்லூர் இராஜதானி காலத்தை நினைவுபடுத்தும் மந்திரி மனையினைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மந்திரிமனையுடன் சேர்ந்து வளர்ந்துள்ள மரமானது மந்திரி மனையின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் அதன் உறுதித்தன்மையினை சீர்கெடாமல் பாதுகாக்கும் நோக்குடன் வெட்டப்பட்டு மருந்து ஏற்றும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** பேரினத்தார் திருகோணமலை கோணேஸ்வரத்தில் நடத்தும் கூத்தைப் பார்த்தீர்களா?

**பதில்:-** அவர்களைக் குற்றம் சொல்லி என்ன பயன்? எத்தனை வயதானாலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கவும் மாட்டேன், தளர்ச்சியால் மாவட்ட அபிவிருத்திச்சபைக் கூட்டங்களுக்குச் செல்லவும் மாட்டேன் என்கிறார் ஒருவர். நல்ல தமிழ்த் தலைமை. காவல்காரன் தூங்கத் தொடங்கினால், வீட்டுக்குள் திருடர்கள் உள்நுழையத் தான் பார்ப்பார்கள்.

யார் என்ன சொன்னாலும், தடுக்க வேண்டியவர் தடுக்காமல் இருக்கத் தன் அரச செல்வாக்கைப் பயன்படுத்தி கோணநாதரைக் காத்து, தமிழர்களதும் இந்துக்களினதும் உரிமைகளை நிலைநிறுத்த முன் வந்திருக்கும் அமைச்சர் டக்ளஸைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்'**

**2. கேள்வி:-** இன்றுள்ள தமிழ்ச்சினிமா உலகின் கதாநாயகர்களில் 'டான்ஸ்' ஆடுவதில் யாரைச் சிறந்தவராய் நீங்கள் கருதுகிறீர்கள்?

**பதில் :-** அது பற்றி ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையே எழுதலாம். தமிழ்ச்சினிமாவின் ஆரம்ப காலத்தில் ஆண்களின் நடனத்திற்குப் பெரிய முக்கியத்துவம் இருந்ததில்லை. தியாகராஜ பாகவதர், ரி.ஆர். மகாலிங்கம் போன்ற கதாநாயக நடிகர்கள் தமது பாட்டுத் திறத்தால்த்தான் மக்களைக் கவர்ந்து வந்தனர். அவர்கள் யாரும் நடனமாடியதாய் எனக்குத் தெரியவில்லை.

அதற்குப் பிறகு வந்த எம்.ஜி.ஆர், சிவாஜி காலத்திலும் அவர்கள் சண்டையாலும், நடிப்பாலும் மக்களை ஈர்த்தார்களே தவிர, பெரிய அளவில் நடனத்;தில் அவர்கள் ஈடுபாடு காட்டவில்லை. அல்லது காட்ட முடியவில்லை. ஆங்காங்கு கை, கால், தலைகளை அசைப்பதும், இடம்விட்டு இடம் துள்ளி நகர்வதுமே இவர்களின் நடனமாக இருந்தது. இவர்களது காலத்தில் வந்த இரண்டாம் நிலைக் கதாநாயகர்களான ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், சிவகுமார் போன்றவர்களும் முன்னவர்களை விட நடனத்தில் சற்று முன்னேறினார்களே தவிர, பெரிய அளவில் அவர்களும் நடனமாடியதாய்த் தெரியவில்லை.

ஆனால் ஒன்று, அக் காலத்தில் இருந்த நகைச்சுவை நடிகர்களான சந்திரபாபுவும், நாகேஷூம் அபரிதமான நடன ஆற்றல் பெற்றிருந்தார்கள். அன்றைக்கே லயத்தோடு உடம்பில் பலவிதமான அசைவுகளை உண்டாக்கி, இவ்விருவரும் நடனத்திற்குப் புதிய பரிமாணத்;தைக் கொடுத்தார்கள். ஆனால் இவ்விருவரும் நகைச்சுவை நடிகர்களாய் இருந்ததால், இவர்களது நடனங்கள் கதாநாயகத் தன்மையாய்ப் பார்க்கப்படவில்லை. ஏதோ உடம்பை அசைத்துக் கோணங்கித்தனம் பண்ணுகிறார்கள் என்பதாய்த்தான், பெரும்பாலோரால் இவர்களின் நடனம் பார்க்கப்பட்டது. இன்று, இத்தகைய நடனத்தைத்தான் பிரபுதேவாவும், லோரன்ஸூம் ஆடி வருகிறார்கள். அன்றைய கதாநாயகர்களால் இவ்விருவரதும் நடன அசைவுகளைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்குப் பிறகு கமல்ஹாசன், ரஜினிக்காந்த் யுகம் தொடங்கியது. இவர்கள் வந்தபிறகுதான் தமிழ்ச்சினிமாவில் கதாநாயகர்களும் நடனம் ஆடத் தொடங்கினார்கள். இவ்விருவரில் கமல்ஹாசனின் நடனம் மிகவும் பிரபலமாயிற்று. ரசிகர்களால் இவரது நடனம் பெரிதும் ரசிக்கப்பட்டது. அவர் சாஸ்திரீய நடனத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அதனால், எல்லா வகை நடனங்களையும் ஆடி, ஒரு காலத்தில் தன் நடனத்தால் ரசிகர்களைப் பெரிதும் ஈர்த்திருந்தார். 'நினைத்தாலே இனிக்கும்', 'சிம்லா ஸ்பெல்' போன்ற படங்களில் நவீனவகை நடனங்களாலும், 'சலங்கை ஒலி', 'விஸ்வரூபம்' போன்ற படங்களில் சாஸ்திரீய நடனங்களாலும் அவர் மக்களை வியக்க வைத்திருந்தார். நடன விடயத்தில் கமல்ஹாசனுக்கு நூறு புள்ளி என்றால், ரஜனிக்காந்திற்குப் பத்துப் புள்ளிகளைக்கூட இட முடியாது. இசையை நிறுத்திவிட்டுப் பார்த்தால், 'நேர்ஸறிப்' பிள்ளைகள் ஆடுவது போலத்தான் அவரது நடனம் இருக்கும். கூட ஆடும் குழுவினரின் நடனத்தை வைத்து, இயக்குனர்கள் இவரது நடனக்காட்சிகளை ஒருவாறு சமாளித்து வந்தார்கள். வருகிறார்கள்.

இடைக்காலத்தில் தமது நடனத்தால் மூவர் மக்களை ஈர்த்தார்கள். அதில் முதலில் ஈர்த்தவர் ஆனந்த்பாபு. அவர் பழைய நடிகர் நாகேஷின் மகன். தந்தையின் நடன அசைவுகளை உள்வாங்கி, இன்றைய காலத்திற்கேற்ப அவற்றில் மாற்றங்கள் செய்து 'பாடும் வானம் பாடியில்' அவர் ஆடிய ஆட்டம் பலரையும் ஈர்த்தது. ஆனால் நடனத்தால் பெயர் வாங்கத் தொடங்கிய ஆனந்த்பாபு தன் வாழ்க்கை ஒழுங்கீனத்தால் சினிமா வாய்ப்புக்களையே இழந்து போனார்.

அதற்கடுத்ததாய் நடனத்தால் தமிழ்ச்சினிமா உலகை மட்டுமன்றி இந்திய சினிமா உலகையே ஓரளவு அசைத்து வெற்றிக்கொடி நாட்டியவர்தான் பிரபுதேவா. ஒரு நடன இயக்குனரின் மைந்தனான இவரும் இவரது இரண்டு சகோதரர்களும் தமிழ்ச்சினிமா உலகிற்குப் புதியவகை நடனங்களை அறிமுகம் செய்தார்கள். மூவருமே நன்றாக ஆடியபோதும், பிரபுதேவாவின் நடனம்தான் பலராலும் கவனித்துப் பார்க்கப்பட்டது. 'சிக்குப்புக்குச் சிக்குப்புக்கு ரயிலே'யில் அவர் ஆடிய ஆட்டம் ரசிகர்களை அசைத்துப் போட்டது என்னவோ உண்மை. நடனத்தில் தான் பிடித்த இடத்தை இன்றுவரை அவர் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்.

பிரபுதேவாவின் மாணாக்கன் என்று அறியப்படும் லோரன்ஸூம் பின்னாளில் தனது நடன ஆற்றலால் மக்கள் மத்தியில் தன்னைப் பதிய வைத்தார். இவரது நடனமும் பிரபுதேவாவின் நடனத்திற்கு இணையாகப் பேசப்பட்டது. ஆனாலும் பிரபுதேவாவிற்குக் கிடைத்த 'மாக்கற்' வரவேற்பு இன்னும் இவருக்குக் கிடைக்கவில்லை.

இவ்விருவரின் நடனங்களுக்கிடையில் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. உடலை அஷ்ட கோணல்களாக வளைத்து நிமிர்த்துவதில் இவ்விருவரும் சமத்தர்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை பிரபுதேவாவின் நடனத்தில் ஒரு கோமாளித் தன்மை இருப்பதாகவே படுகிறது. லோரன்ஸிலும் அந்தச் சாயல் உண்டானாலும் அவர் நடனத்தில் வரும் வியக்கத்தக்க சிறிய அசைவுகளில் ஓர் கதாநாயகத் தன்மையையும் காணமுடிகிறது.

இனி இன்றைய கதாநாயகர்களான அஜித், விஜய், சூர்யா, சிம்பு, தனுஷ் போன்றவர்கள் பற்றி தனியே ஆராயவேண்டும். தனது ஆரம்பப் படங்களில் சூர்யா ஆடிய ஆட்டங்கள் பரிதாபத்திற்குரியவை. இடையில் என்ன நடந்ததோ தெரியவில்லை. திடீரென 'மௌனம் பேசியதே' படத்தில் வந்த 'ஆடாத ஆட்டமெல்லாம்' பாட்டில் ஆடாத ஆட்டம் போட்டு ரசிகர்களை அவர் வியக்க வைத்தார். இன்றுவரை அவரது அந்த நடன ஆற்றல் தொடர்கிறது.

சிம்புவுக்கும் இயல்பாக ஆட வரும். ஆனால் அவர் ஆட்டத்தில் கொஞ்சம் விரசமான அசைவுகளும் இடையிடையே வந்து முகம் சுழிக்க வைக்கும். தந்தையைப் போலவே பல விடயங்களையும் செய்யத் தலைப்பட்டு ஒரு விடயத்திலும் தனித்துவம் பதிக்காமல் போய்விட்டார் இவர்.

தனுஷ் பல விடயங்களாலும் வியப்பேற்படுத்தும் இன்றைய கதாநாயகன். ஒரு கதாநாயகனுக்குரிய எந்த இலட்சணமும் இல்லாமல் அவர் திரைக்கு வந்த பொழுது இவரும் ஒரு நடிகரா? என பலரும் முகம் சுழித்தனர். ஆனால் நாளாக நாளாக நடிப்பு, சண்டை, நடனம் என எல்லாவற்றிலும் ஓர் எல்லை தொட்டு நிற்கிறார் இவர். ஏதோ ஒரு படத்தில் 'சிலரைப் பார்த்தவுடன் பிடிக்கும், சிலரைப் பார்க்கப் பார்க்கத்தான் பிடிக்கும்' என்று அவர் வசனம் பேசுவார். பார்க்கப் பார்க்கப் பிடிக்கும் கதாநாயகர்களில் இவர் முக்கியமானவர். வர வர அவரது நடிப்புத் துறை சார்ந்த எல்லா ஆற்றலும் வியக்கும்படியாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. நடன ஆற்றலும்தான்.

இவர்களைத் தவிர புதிதாக வந்த ஜெயம் ரவி, கார்த்தி, என மற்றைய நாயகர்களும் கூட ஓரளவு நன்றாகவே நடனமாடுகிறார்கள்.

இனி, இன்றைய தலைமைக் கதாநாயகர்களாகிய அஜித், விஜய் ஆகியோரின் நடனம் பற்றிச் சொல்வதானால், அஜித் தனது ஆரம்பப் படங்;களில் ஓரளவு நன்றாகவே நடனமாடி வந்தார். அழகான அவரது தோற்றம் அவரது நடனத்திற்குக் கிடைத்த ஒரு 'பிளஸ் பொயின்ற்'. அவர் சிம்ரனுடன் நடித்த, 'அவள் வருவாளா' படத்தில் வந்த, 'சேலையிலே வீடு கட்டவா' பாட்டுக்கான நடனத்தில் அழகான பல புதிய அசைவுகளை எல்லாம் செய்து ரசிகர்களை பெரிதும் ஈர்த்தார். ஆனால் வயதின் முதிர்ச்சியோ அல்லது அடிக்கடி நிகழ்ந்த விபத்துக்களால் வந்த உடல் பாதிப்போ என்னவோ, போகப் போக, அவரது நடன ஆற்றல் பெரிதும் தேய்வுறத் தொடங்கியது. இன்றைக்கு முதல்தர கதாநாயகர்களில் ஒருவராக அவர் இருந்தாலும், மூன்றாம், நான்காம் இடத்தில் இருக்கும் கதாநாயகர்களின் நடனத்தின் அளவுகூட அவரது நடனம் இல்லாமல் போய்விட்டது உண்மை.

என்னைக் கேட்டால், நடனத்தைப் பொறுத்தளவில் இன்று முதல் இடம் 'விஜய்'க்குத்தான். ஆரம்பம் தொட்டு இன்றுவரை நடனத்தில் அவர் காட்டும் ஆற்றல் வியப்பிற்குரியது. இவரும் ஒரு கதாநாயகனா என்று நினைக்கும் அளவில் இருந்த, இவரது ஆரம்ப காலப் படங்களில்கூட, நடனத்தில் தனது தனித்த ஆற்றலை இவர் காட்டியே வந்தார். பின்னாளில் தோற்றத்தாலும் கவர்ச்சியாலும் ஏதோ மாயம் செய்து முன்னேறிய இவர், இன்று தமிழ்ச்சினிமாவில் முதலிடத்தில் இருக்கும் கதாநாயகனாகக் கருதப்படுகிறார்.

படத்திற்குப் படம் நடனத்தில் அவர் காட்டும் ஆற்றல் சிகரம் நோக்கி வளர்ந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு புதிய படங்களிலும் வரும் நடனங்களில் வித்தியாசமான, நளினம் பொருந்திய அசைவுகளைச் செய்துகாட்டி வியக்க வைக்கிறார் மனிதர். 'ஆல்தோட்ட பூபதி'யில் அவர் சிம்ரனுடன் ஆடிய போட்டி நடனம், 'உதயா உதயா' என்ற 'மெலடி'ப் பாடலுக்கு புதுமையாய் அவர் சிம்ரனுடன் ஆடிய நடனம், 'வாடி வாடி வாடி வாடி கைபடாத சீடி' என்ற பாட்டின் நடனத்திற்கு இடையில் நாட்டுக்கூத்தை இணைத்திருந்த விதம் என ஒவ்வொரு படத்திலும் நடனத்தில் ஏதாவது ஒரு புதுமை செய்து கவர்வதில் விஜய்க்கு நிகர் விஜயே தான். முக்கியமாக கதாநாயகத்தன்மை கெடாமல் நடனம் ஆடுவதில் வல்லவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'சவுண்டை' நிறுத்திவிட்டுப் பார்த்தால் பெரும்பாலான நடிகர்களின் நடனம் உடற்பயிற்சியாய்த்தான் தோன்றுகிறது. ஆனால், விஜயின் பாடல்களில் 'சவுண்டை' நிறுத்திவிட்டுப் பார்த்தாலும் கூட அவர் நடனம் அழகாகத்தான் இருக்கிறது. நடன விடயத்தில், இன்றைக்கு தமிழ்ச்சினிமாவில் போட்டிக்கு ஆள் இல்லாத தனி இடம், விஜய்க்கு மட்டுமே உரியது என்று நினைக்கிறேன்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சலிக் குறிப்பு

# மலையக இலக்கிய முன்னோடி தெளிவத்தை ஜோசப் மறைந்தார்

- முருகபூபதி -

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மலையக மக்களின் ஆத்மாவை தனது படைப்புகளில் பிரதிபலித்தவரும், மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராக நீண்ட காலம் இயங்கியவருமான தெளிவத்தை ஜோசப் நேற்று 21 ஆம் திகதி அதிகாலை மறைந்துவிட்டார்.

அமைதியான இயல்புகளைக் கொண்டிருந்த அவர், ஆழ்ந்த உறக்கத்திலேயே உலகைவிட்டுவிடைபெற்றுவிட்டார்.

அவர் உடல் நலக்குறைவோடு இருப்பது அறிந்து சில நாள்களுக்கு முன்னர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினேன். தனக்கு சற்று சோர்வாக இருப்பதாகச் சொன்னார்.

அவருடனான முதல் சந்திப்பு பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தீம்புனல் வார இதழில் அண்மையில் எழுதியிருந்தேன். எனினும், அவர் அதனைப் பார்த்தாரோ தெரியாது. தற்போது ஆழ்ந்த துயரத்துடன் இந்த அஞ்சலிக் குறிப்புகளை எழுதுகின்றேன்.

நேற்று செய்தியறிந்ததும் அவரது புதல்வி சியாமளாவுடன் தொடர்பு கொண்டு ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்துவிட்டே இந்தப்பதிவை எழுதுகின்றேன்.

அவர் தனது புதல்விகள் திரேசா – சியாமளா ஆகியோரின் பெயர்களிலும் முன்னர் தினகரனில் இலக்கிய பத்தி எழுத்துக்களை எழுதினார்.

சமகாலத்தில் அடுத்தடுத்து எமது கலை, இலக்கிய, ஊடக ஆளுமைகளை இழந்து கொண்டிருக்கின்றோம். இறுதியாக 2019 ஆம் ஆண்டு பிற்பகுதியில் தெளிவத்தை ஜோசப்பின் தலைமையில்தான், யாழ். காலைக்கதிரில் 40 வாரங்கள் தொடராக வெளியானஎனது இலங்கையில் பாரதி ஆய்வு நூலுருப்பெற்று கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில் காலைக்கதிர் ஆசிரியர் நண்பர் வித்தியாதரனும், கலந்துகொண்டு உரையாற்றினார். அந்த நிகழ்வில் கலந்து கொண்ட இலக்கிய ஆர்வலர் சட்டத்தரணி இராஜகுலேந்திரா மற்றும் இலக்கியத் திறனாய்வாளர் கே. எஸ்.சிவகுமாரன் ஆகியோரைத் தொடர்ந்து தெளிவத்தை ஜோசப் அவர்களும் விடைபெற்றிருப்பது மனதில் மிகுந்த சோகத்தை உருவாக்கியிருக்கிறது.

நேற்றுக் காலையில் அவரது குடும்பத்தினர், அவரைத் துயில் எழுப்பச் சென்ற போதுதான், அவரது உயிர் அவரை விட்டு பிரிந்திருப்பதும் தெரிய வந்திருக்கிறது.

எவருக்கும் சிரமம் தராமல் அமைதியாக விடைபெற்றுவிட்டார் இந்த இலக்கியவாதி.


சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயரைக் கொண்டிருந்த அவர், 1934 ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தில் ஊவாக்கட்டவளை என்ற கிராமத்தில் பிறந்தார்.

பின்னாளில் பெற்றோரின் பூர்வீகமான தமிழ்நாடு கும்பகோணத்தில் படித்துவிட்டு, மீண்டும் தாயகம் திரும்பி பதுளை புனித பேதுருவானவர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து, தெளிவத்தை என்ற மலையகத் தோட்டத்தில் ஆசிரியராக பணியாற்றினார்.



இலக்கியப்பிரதிகளை இந்த ஊரின் பெயரை முன்னிறுத்தி தனது பெயரையும் இணைத்துக்கொண்டு எழுதியவர். தெளிவத்தை என்றால், எழுத்தாளர் ஜோசப்தான். அந்த ஊருக்கும் ஓர் அடையாளத்தை வழங்கினார்.

மலையகத்தில் ஒரு தோட்டப் பாடசாலையில் ஆசிரிய பணியாற்றியவர், கணக்கியல் படித்து தேர்ந்தார். கொழும்புக்கு வந்து அக்காலத்தில் பிரபல்யமான இனிப்புவகையான ஸ்டார் பிராண்ட் டொபி உற்பத்தி செய்யும் Modern Confectionary Works Ltd என்ற






நிறுவனத்தில் கணக்காளராக பணியாற்றினார்.

சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், ஆய்வுத் தொடர்கள், கட்டுரைகள் என அயராமல் எழுதிவந்தவர்.

தெளிவத்தை ஜோசப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறுகதைகளை தொகுத்து செம்பதிப்பாக தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் என்ற நூலை, இவரது நீண்ட கால நண்பர்கள் மாத்தளை செல்வா என அழைக்கப்படும் எச். எச். விக்கிரமசிங்காவும் லண்டனில் வதியும் எழுத்தாளர் மு. நித்தியானந்தனும் வெளியிடவிருக்கிறார்கள்.

இந்த இனிப்பான செய்தியையும் அறிந்துவிட்டே விடைபெற்றுவிட்டார் எங்கள் தெளிவத்தை.

தனது கதைகள், நாவல்களில் மலையக மக்களின் வாழ்க்கையை உயிர்த்துடிப்போடு சித்திரித்திருக்கும் தெளிவத்தை அவர்கள், தான் திரைக்கதை வசனம் எழுதிய 'புதிய காற்று' திரைப்படத்திலும் அம்மக்களின் அவலமான வாழ்க்கையை சித்திரிக்கத் தவற




வில்லை.

1975 ஆம் ஆண்டு வெளியான அந்தப்படம்தான் புதிய காற்று.

இந்தத்திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர்கள் இருவர். இன்று இலங்கையில் பிரபல அரசியல் தலைவர்கள். அவர்கள்தான் மனோ கணேசன் – பிரபா கணேசன். இவர்களின் தந்தையார் வி.பி. கணேசன் இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தின் செயலாளராக இருந்தவர்.

எஸ். இராமநாதனின் இயக்கத்தில் வெளிவந்த இந்தப் படத்தை வி.பி.கணேசன் தயாரித்து கதாநாயகனாகவும் தோன்றினார்.




தெளிவத்தை ஜோசப் சிறுகதைகள் எழுதிக்கொண்டே ஆய்வுகளிலும் ஈடுபட்டவர். அந்த ஆய்வுகளில் மகுடமாகத் திகழ்வது மலையக சிறுகதை வரலாறு.

1960 களில் இலக்கியப் பிரதிகள் எழுதத் தொடங்கிய தெளிவத்தையின் ஒரு சிறுகதை ஜி. உமாபதி அக் கால கட்டத்தில் தமிழ்நாட்டில் வெளியிட்ட உமா என்ற இதழில் வெளிவந்திருக்கிறது.

யார் இந்த உமாபதி?

இவர்தான் சிவாஜி கணேசன் நடிப்பில் ஏ.பி. நாகராஜன் இயக்கத்தில்வெளியான ராஜராஜசோழன் திரைப்படத்தின் தயாரிப்பாளர்.

1960 களில் தெளிவத்தை ஜோசப் சிறுதைகள் எழுதத் தொடங்கியிருந்தாலும், நூலுருவில் முதலில் வெளிவந்தது காலங்கள் சாவதில்லை நாவல்தான். இதனை வீரகேசரி பிரசுரம் 1974 இல் வெளியிட்டது. அதற்குப் பின்னர் தான், மு. நித்தியானந்தனின் வைகறைவெளியீடாக இவருடையகதைகளின் தொகுதி நாமிருக்கும் நாடே 1979 இல் வெளிவருகிறது. இதற்கு தேசிய சாகித்திய விருதும் கிடைத்தது.

தேசிய சாகித்திய விருதினை இரண்டு தடவை பெற்றுள்ள தெளிவத்தை, சம்பந்தன் விருதும் பெற்றவர். கலாசார அமைச்சின் கலாபூஷணம் பட்டமும் கிடைத்தது. பேராதனை பல் கலைக்கழகம் அழைத்து பாராட்டி கௌரவித்திருக்கிறது. தமிழ்நாட்டில் 2003 இல் காலச்சுவடு நடத்திய தமிழினி மகாநாட்டிலும் ஆஸ்திரேலியாவில் 2009 இல் நடந்த தமிழ் எழுத்தாளர் விழாவிலும் கலந்து கொண்டவர். இலங்கையில் இலக்கியத்திற்கான உயர் விருது – சாகித்திய ரத்னாவும் இவருக்கு கிடைத்தது.

பின்னாளில் பிரபல எழுத்தாளர் ஜெயமோகனின் ஏற்பாட்டில் வழங்கப்படும் விஷ்ணுபுரம் விருதும் கிடைத்திருக்கிறது.

இங்கிலாந்திற்கும் கனடாவுக்கும் அழைக்கப்பட்டு பாராட்டி கௌரவிக்கப்பட்டவர்.

1983 ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தின்போது தான் பணியாற்றிய ஸ்டார் இனிப்புக் கம்பனிக்கு அருகிலிருந்த செயின்ஸ்தான் திரையரங்கில் இரண்டு நாள்கள் தான் சிறைப்பட்டிருந்த அவலத்தை நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983 என்ற உண்மைப்புனைவு நாவலில் தெளிவத்தை சித்திரித்திருக்கிறார்.

இன்று அந்த இனிப்புக் கம்பனியும் இல்லை, செயின்ஸ்தான் திரையரங்கும் இல்லை. தெளிவத்தை ஜோசப்பும் இன்றில்லை.

அன்று நடந்த அவலக்கதை மாத்திரம் தெளிவத்தையின் படைப்பில் வாழ்கிறது!

தெளிவத்தையின்வாசிப்புத்தளமும் விரிவானது. எந்தவொரு இலக்கியக்கூட்டத்திலும் மேம்போக்காக பேசமாட்டார். தான் எடுத்துக்கொண்ட தலைப்புக்காக பல நாள்கள் ஆதாரங்களையும் திரட்டி கோவைப்படுத்திக் கொண்டே பேசுவார்.

நாவல், சிறுகதை எழுதிக்கொண்டே பத்திரிகைகளில் ஆய்வுத்தொடர்களையும் தந்திருப்பவர். பல வருடங்களுக்கு முன்னர், தினகரன் வாரமஞ்சரியில் பல தமிழக – ஈழத்து முன்னோடி எழுத்தாளர்களின் சிறுகதைகளைத் தேடி எடுத்து பிரசுரித்து வந்தார். கதையை மாத்திரம் அறிமுகப்படுத்தாமல் குறிப்பிட்ட அக்கதையை எழுதி



யவரின் வாழ்க்கைச் சரிதத்தையும் சுருக்கமாக பதிவுசெய்தார்.

தற்போது எம்மிடம் எஞ்சியிருப்பது தெளிவத்தை ஜோசப் பற்றிய நினைவுகளும் அவரது படைப்புகளும் அன்னாரது பாசமிகு குடும்பத்தினரும் தான்.

தொலைவிலிருந்து சிரம் தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றேன்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 157

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## விடுதலை புலிகளின் வைராக்கியம்



புலிகளுடன் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹென்றிக்ஸன்

ஜெனிவாவில் நடந்த சந்திப்பில் ஏப்ரல் 2006 இல் மீண்டுமொரு சந்திப்பு ஜெனிவாவிலேயே நடத்துவதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால் அரசாங்கம் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை மீறுவதாலும், ஏற்றுக் கொண்டவற்றை நடைமுறைப்படுத்தத் தவறுவதாலும், தாங்கள் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றப் போவதில்லை என விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

நோர்வே அனுசரணையாளர்கள் விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சாளர்களோடும் அவர்களது புலம்பெயர் தொடர்பாளர்களோடும் பேச்சு வார்த்தைகள் நடத்தியும் விடுதலைப் புலிகள் அக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு இணங்கவில்லை.

பின்னர் இந்த சந்திப்பு 8,9 ஜூன் 2006 இல் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும் அங்கு பிரசன்னமாக இருந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், மறுபக்கத்தில் அரசுத் தரப்பில் வந்த பிரதிநிதிகள் குழு உயர்மட்டத்தில் இல்லை என்ற காரணத்தைக் காட்டி அவர்களைச் சந்திக்க முடியாது என்று நோர்வே அனுசரணையாளர்களிடம் அறிவித்தனர்.

யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவில் இருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் நீக்கப்பட வேண்டியமை பற்றியும், யார் அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்படுவார்கள் என்ற விடயங்கள் குறித்தும் பேசிக் கலைந்தனர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்.



ஐரோப்பிய ஒன்றியம் 30 மே 2006 விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்தமையால் அந்த நாட்டின் பிரதிநிதிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிப்பது கேள்விக்குறியானது.

ஆனால் அந்தத் தடைத் தீர்மானம் எடுக்கப்பட்டதால் விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தமிழ்ச்செல்வன் மிகக் கோபம் கொண்டு, அவர்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவில் நீக்கப்பட வேண்டும் என்று நின்றார்.

இதன் பின்னணியில் இன்னும் ஒரு காரணமும் இருந்தது.

விடுதலைப் புலிகள் கடற்பரப்பில் தங்கள் எது ஆதிக்கத்தை நிலை நாட்ட முற்பட்டு, ஸ்ரீலங்கா அரசின் படைகளோடு மோதல்களில் ஈடுபட்ட போது, யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவினரும் பாதிக்கப்பட்டனர். அப்படியான சம்பவம் ஒன்றின் பின்னணியில் குழுவின் தலைவர் ஹென்றிக்சன் கடற் பகுதிகளில் அரசாங்கக் கடற்படை தான் வரலாம், யுத்த நிறுத்த ஏற்பாடுகளின் படி விடுதலைப் புலிகள் கடற் பரப்பின் இயங்குவது அத்துமீறல் ஆகும் என்ற முடிவை எடுக்க, அது விடுதலைப் புலிகளுக்குப் பாரதூரமான தாக்கத்தையும் கோபத்தையும் அது வளர்க்கும்.

கடற்பரப்புகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களும் விமானத்தளத்தின் பாதைகளின் அறிவிப்பும், இந்தியாவுக்கு தங்களது பிராந்திய பாதுகாப்பை ஒட்டி ஆதங்கங்களைத் தந்தது.

இவற்றை ஒட்டி நோர்வே அனுசரணையாளர்கள் விடுதலைப் புலிகளிடம் அவற்றைப் பார்வையிட அனுமதி கேட்டும் அவை மறுக்கப்படுவதாலும், நோர்வே அனுசரணையாளர்கள் விடுதலை புலிகள் மீது பச்சாதாபம் கொண்டு அவர்கள் (புலிகள்) சார்பாக இயங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்களுடன் இந்திய தரப்பு அதிகாரிகள் சந்திப்புக்களை நடத்தி அவற்றை வெளிப்படையாகவே நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெரிவித்தனர்.

அந்தச் சந்திப்புகளில் இந்தியா தாங்கள் ஏற்படுத்திய 1987 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை எதிர்த்து, விடுதலைப் புலிகள் நடந்து கொண்டமை, பிரேமதாஸாவுடன் இணைந்து, கைகோர்த்து அவர்களது படைகளை வெளியேற்றியமைக்குப் பின்னர் மே 1991 இல் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தமை, தொடர்ந்தும் சர்வதேச ரீதியில் தங்களுக்கு எதிரான பிரச்சாரங்கள் போன்றவற்றால் உள்ள மனப் புழுக்கங்களில் விடுதலைப் புலிகள் அவர்களது இடத்தில் வைக்கப்பட வேண்டும் என்ற மனப்பான்மையையே இந்திய தரப்பினர் வெளிப்படுத்தினர்.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக சோனியா காந்தியே 2004 தேர்தலில் வெற்றி பெற்றிருந்தமை, அவர்களுக்கு தமிழ்நாட்டில் திமுக அரசு துணையாக அரசில் இருந்தமை, துரதிஷ்டவசமாக ஜெயலலிதாவின் அதிமுக விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக இருக்காதமை, எல்லாம் சேர்ந்து புதுடெல்லி அரசுக்குத் தமிழ்நாட்டின் முக்கிய கட்சிகளால் பாரதூரமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படாமல் விடப்பட்டன.

புதுடெல்லியில் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் கொண்டவர்கள் விடுதலைப் புலிகள் பாடம் படிக்க வேண்டும் என்ற மனக்கொதிப்பிலேயே காரியமாற்ற எத்தனித்த போது, நோர்வே அனுசரணையாளர்கள் எத்தனையோ தடவைகள் விளையக்கூடிய விபரீதங்களை எடுத்துச் சொன்ன போதும் இந்திய தரப்பினர் விடுதலை புலிகளோடு இருந்த அளவுக்கு மீறிய நட்பினால் அப்படி நோர்வேயினர் பார்க்கிறார்கள் என்ற விமர்சனங்களையே பட்டவர்த்தனமாக முன் வைத்தனர். இந்தியக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகள் ஆதிக்கம் செலுத்தி, அவை தங்களுக்கு அச்சுறுத்தலாக வரலாம் என்ற சந்தேகங்களை இந்தியா வளர்த்தது அவற்றையும் மேலதிக காரணங்களாகக் காட்டி, பேச்சு வார்த்தைகளை பலப்படுத்துமாறு 2007 இல் கேட்கப்பட்ட போதும் இந்தியா தொடர்ந்து போரை நிறுத்துமாறு மஹிந்த

வைக்க்கைக் கோரவிலலை. இந்தியாவின் இந்தச் செயற்பாடு கடைசி வரைக்கும் தொடர்ந்தது.

அவர்கள் தமிழ்நாட்டில் இருந்தும், தமிழ் புலம்பெயர் வட்டாரங்களில் இருந்தும் வரக்கூடிய கண்டனங்களை எப்படி சமாளிப்பது என்பதில்தான் கவனம் செலுத்தினர். பொது வழியில் எதுவும் பேசுவதை தவிர்த்தார்கள். விடுதலை புலிகளுக்கு இப்படியாகும் என்பதை அவர்கள் கணக்கெடுத்திருந்தார்கள்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்ஷர்களும் மற்றும் அவர்களின் சகாக்களும் அரசநிதியை கொள்ளையடிப்பதை நிறுத்தவில்லை!

## சரத் பொன்சேகா காட்டம்

பொருளாதார பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்கள் பட்டினியால் வாடும் நிலையில் கூட ராஜபக்ஷர்களும், அவர்களின் சகாக்களும் அரச நிதியைக் கொள்ளையடிப்பதை தவிர்த்துக் கொள்ளவில்லை.

மீண்டும் எழுவோம் என நாட்டை வலம் வருகிறார்கள். ராஜபக்ஷர்கள் நாட்டுக்காகவாவது இனி விலகிக்கொள்ள வேண்டும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

போராட்டத்தின் ஊடாக மாத்திரமே ஊழல்வாதிகளை விரட்டியடிக்க முடியும். ஊழலற்ற சிறந்த அரசியல் கட்டமைப்பை உருவாக்க நாட்டு மக்கள் ஒன்றுபட வேண்டும் எனவும் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவு மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவில் ஒருசில விடயங்கள் சாதகமானதாக உள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் உட்பட பொதுஜன பெரமுனவின் ஒருசில உறுப்பினர்கள் 22 ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதை அவதானிக்க முடிகிறது.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கத் தகுதியற்றவர்கள் என்ற ஏற்பாடு 22 ஆவது திருத்த வரைவில் உள்வாங்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இலங்கைக்கு சேவையாற்ற வேண்டுமாயின் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்க வேண்டிய தேவை கிடையாது. குறுகிய நோக்கத்துக்காகப் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் முறையற்ற வகையில் செயற்படுகின்றமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

அரசியல் திருத்தம் என்பது ஓர் அரசியல் நாடகம். ஊழல்வாதிகளுக்குக்கு இத் திருத்தங்களால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. நாட்டைச் சீரழித்த குடும்பம் தற்போது மீண்டும் எழுவதாகக் குறிப் பிட்டுக் கொண்டு நாட்டை வலம் வருகிறார்கள். நாட்டின் நலனை யும்,எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு ராஜபக்ஷர்கள் இனிவாயது விலகிக் கொள்ள வேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையடைந்து



விட்டது,நாட்டு மக்கள் பட்டினியில் வாழ்கிறார்கள். ஆனால் ராஜபக்ஷர்களும், அவர்களின் சகாக்களும் அரச நிதியைக் கொள்ளையடிப்பதை நிறுத்திக் கொள்ளவில்லை. போராட்டத்தால் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

மக்கள் போராட்டத்தின் ஊடாக மாத்திரம் தான் ஊழல்வாதிகளை விரட்டியடிக்க முடியும். ஆகவே, சிறந்த ஊழலற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க நாட்டு மக்கள் ஒன்றுபடவேண்டும். போராட்டம் நிச்சயம் வெற்றிபெறும். – என்றார்.


NFlash Super Detergent

வேலை வாய்ப்புக்கள்

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

கணணி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்.
சாரதி - Light Vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் (முன்பள்ளி) - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர்- வாகன உதவியாளர் (பெண்),
ஆசிரியர்- தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள்தேவை
பலகார சமையல்காரர் - முறுக்கு, மிக்சர் ரோல், வடை போன்ற நொறுக்குத் தீனிகள் தயாரிப்பவர்கள் ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி - விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதி வாய்ந்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி - 186/11 NFlash Super detergent
நெசவுசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


# ராஜபக்ஷவினரை பலப்படுத்த அரசமைப்பு திருத்தங்களை கொண்டுவந்து அரசாங்கம் இந்த நாட்டை அழித்துள்ளது!

## முஜிபுர் வேதனை

மக்களின் எதிர்பார்ப்பு அரசமைப்பு திருத்தம் அல்ல. புதிய அரசமைப்பாகும். என்றாலும் அரசாங்கத்தில் இருப்பவர்கள் எப்போதும் ராஜபக்ஷவினரை பலப்படுத்தவே அரசமைப்பு திருத்தங்களை மேற் கொண்டு நாட்டை அழித்துவிட்டனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

மக்கள் வீதிக்கிறங்கி போராட்டம் மேற்கொண்டு மாற்றத்தை ஏற்படுத்த புதிய அரசமைப்பையே கோரி வந்தனர். ஆனால் அரசாங்கம் தற்போது 19 ஆவது திருத்தை விட சிறிய 22 ஆவது திருத்தத்தை கொண் டுவந்திருக்கின்றது. அதேநேரம் 19 ஆம் தருத்தத்தை நாங்கள் கொண்டு வந்த போது ஓர் உறுப்பினரை தவிர அனைவரும் ஆதரவாக வாக்களித்தனர்.

அதில் குறைபாடுகள் இருந்தால் திருத்திக்கொண்டு அதனை முன்னுக்கு கொண்டு சென்றிருக்கலாம். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதுடன் 20 ஆம் திருத்தத்தை கொண்டு வந்து, கோட்டாபய ராஜபக்ஷவை பலப்படுத்தி, நாட்டை அழித்துவிட்டார்கள்.

அத்துடன் 20 ஆம் திருத்தத்தைக் கொண்டுவரும்போது, இது நாட்டை அழித்துவிடும் என நாங்கள் அன்று தெரிவித்தோம். ஆனால் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. 19 ஆம் திருத்தம் கொண்டுவந்தபோது நாங்கள் அன்று இருந்த நிலைப்பாட்டிலேயே இன்றும் இருக்கின்றோம். எமது கட்சியின் தலைவர் மாறினாலும் சஜித் பிரேமதாஸ தலைமையில் எமது கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை.

ஆனால் அரசாங்கத்தில் இருப்பவர்கள் காலத்துக்குக் காலம் கொள்கையை மாற்றிக்கொண்டு ராஜபக்ஷவினரைப் பலப்படுத்தவே நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். 2010 இல் 18 ஆம் திருத்தத்தைக் கொண்டுவந்து மஹிந்த ராஜபக்ஷவை பலப்படுத்த நடவடிக்கை எடுத்




தார்கள்.

2020 இல் 20 ஆம் தருத்தத்தைக் கொண்டுவந்து கோட்டாபய ராஜபக்ஷவை பலப்படுத்த நடவடிக்கை எடுத்தார்கள். அதனால் இவர்கள் காலத்துக்கு காலம் ராஜபக்ஷவினரை பலப்படுத்தி நாட்டை அழித்துவிட்டார்கள்.

அத்துடன் இந்த அரசாங்கத்துக்கு உறுதியான கொள்கை ஒன்று இல்லை. ராஜபக்ஷவினருக்குத் தேவையான முறையில் நாட்டின் யாப்பில் தித்தம் கொண்டு வந்து இன்று நாட்டின் பொருளாதாரத்தை அழித்துள்ளனர்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு ஜனாதிபதியாக முடியாமல் இருப்பதால் ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவே பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க 19 ஆம் திருத்தத்தைக் கொண்டு வந்த தாக அமைச்சர் அலி சப்றி அன்று 20 ஆம் திருத்தம் கொண்டுவரும்போது தெரி வித்தார். ஆனால் இன்று நாட்டின் ஜனாதிபதி யார் என நான் கேட்கின்றேன்.

அப்படியானால் 22 ஆம் திருத்தத்துக்கு அமைச்சர் அலிசப்ரி வாக்களிப்பாரா எனக் கேட்கின்றேன். அலிசப்றி அன்று நாடாளுமன்றத்தையும் ஏமாற்றி, மக்களையும் ஏமாற்றியுள்ளார்.

எனவே மக்களின் எதிர்பார்ப்பு அரசமைப்பு திருத்தம் அல்ல. புதிய அரசமைப்பாகும். என்றாலும் 20ஆம் திருத்தத்தை வாபஸ்பெற்றுக்கொண்டு 22 ஆம் திருத்தத்தைக் கொண்டுவருவது தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அதனையும்விட 19 ஆம் திருத்தத்தை கொண்டுவந்திருக்கலாம். ஏனெனில் 22 ஆம் திருத்தத்தில் மக்கள் எதிர்பார்க்கும் பாரிய திருத்தங்கள் எதுவும் இல்லை. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியப் பாதுகாப்புத் துறை விரைவில் உலக அளவில் முன்னணியில் இருக்கும்

## பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதி







நாட்டின் ஒருங்கிணைந்த முயற்சியால் வரும் காலங்களில் இந்தியப் பாதுகாப்புத் துறை உலக அளவில் முன்னணியில் இருக்கும் என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

காந்திநகரில் நடந்த 'மந்தன்' விழாவில் உரையாற்றிய சிங், நாட்டின் ஒருங்கிணைந்த முயற்சியால், வரும் காலங்களில் இந்திய பாதுகாப்புத் துறை உலக அளவில் முன்னணியில் இருக்கும். குஜராத் முதல் அசாம் வரை நம் நாட்டில் திறமையாளர்களுக்குப் பஞ்சமில்லை. மற்றும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, அவர்களை அடையாளம் கண்டு, செம்மைப்படுத்தி, தேசத்தின் முன்னேற்றத்துடன் இணைக்க வேண்டிய அவசியம் உள்ளது." என்றார் அவர்

அரசாங்கத்தின் 'பாதுகாப்பு சிறப்புக்கான கண்டுபிடிப்புகள்' (ஐடெக்ஸ் – ஷ்ம்சியீ) முயற்சியைப் பாராட்டிய பாதுகாப்பு அமைச்சர், அதன் சிறந்த தன்மை காரணமாக கடந்த ஆண்டு பிரதமர் விருது வழங்கப்பட்டது என்றார்.

ஐடெக்ஸ் இந்தியாவை தன்னிறைவு மற்றும் சுயத்தில் தங்கியிருக்கும் கட்டமைப்பாக மாற்றுவதற்கான முக்கிய முயற்சிகளில் ஒன்றாகும். இது 'பாதுகாப்பு ஏற்றுமதி 2018' இன் போது பிரதமரால் தொடங்கப்பட்டது. அதன் சிறப்பான தன்மை காரணமாக, கடந்த ஆண்டு பிரதமரின் விருது வழங்கப்பட்டது, என்று அவர் கூறினார்.

ஐடெக்ஸ் நாட்டில் தொழில் முனைவோர் திறனை வெளிப்படுத்தியுள்ளது, இது பல்வேறு கொள்கைக் கட்டுப்பாடுகள் காரணமாக இதுவரை தெரியவில்லை. இது ஆர்வமுள்ள ஸ்டார்ட் - அப்களுக்கும்(தொடக்க நிறுவனங்களுக்கும்), புதுமையாளர்களுக்கும் முன் வந்து பாதுகாப்புத் துறையில் உள்ள மற்ற பங்குதாரர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கான தளத்தை வழங்கியுள்ளது." - என்று சிங் மேலும் கூறினார்.

புதிய நோக்கங்களை நோக்கி செல்லும் இந்தியாவின் பாதைகள் புதியதாக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"இந்தியா இன்று உலகின் இளைய நாடு, மக்கள் தொகைக் கண்ணோட்டத்தில் மட்டுமல்ல, மனதாலும் கூட. அதன் சிந்தனை புதியது, அதன் இலக்குகள் புதியவை, எனவே புதிய நோக்கங்களுக்கான பாதைகளும் புதியதாக இருக்க வேண்டும், என்று அவர் கூறினார்.

இன்று முன்னதாக, காந்திநகரில் இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு உரையாடலின் போது 43 ஆப்பிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் மத்தியில் சிங் உரையாற்றினார்.

இந்திய பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான அவர்களின் அபிலாகைளை நிறைவேற்ற, ஆப்பிரிக்க நாடுகளுக்கு அனைத்து அரங்கங்களிலும் ஆதரவை வழங்குவதில் இந்தியா உறுதியுடன் உள்ளது, என்று அவர் கூறினார். 'பாதுகாப்பு ஏற்றுமதி - 2022'ஐ ஒட்டி இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பரஸ்பர ஆர்வமுள்ள பகுதிகளில் ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராக உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஆப்பிரிக்க கண்டத்துடனான இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கூட்டாண்மை, ஆப்பிரிக்க மக்கள் மீதான நமது பாரம்பரிய நல்லெண்ணத்தால் தொடர்ந்து வழிநடத்தப்படும்.

ஒரு சில நாடுகள் மற்றவர்களை விட உயர்ந்ததாகக் கருதப்படும் ஒரு படிநிலை உலக ஒழுங்கை இந்தியா நம்பவில்லை. இந்தியாவின் சர்வதேச உறவுகள் மனித சமத்துவம் மற்றும் கண்ணியத்தின் சாரத்தால் வழிநடத்தப்படுகின்றன, இது நமது பண்டைய நெறிமுறைகளின் ஒரு பகுதியாகும், என்றார் அவர்.

"வாடிக்கையாளர் அல்லது செயற்கைக்கோள் அரசை உருவாக்குவது அல்லது உருவாகுவது என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, எந்தவொரு தேசத்துடனும் கூட்டு சேரும் போது, அது இறையாண்மை சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். பரஸ்பர பொருளாதாரத்தை நோக்கி நாம் பணியாற்றும்போது, இந்தியாவுடன் உறவுகளை உருவாக்குவதில் வளர்ச்சி இயற்கையாகவே வருகிறது. - என்று அவர் கூறினார்.

உலகளாவிய உலக ஒழுங்கு மேலும் ஜனநாயகப்படுத்தப்படுவதற்கு தகுதியானது என்ற எங்கள் நம்பிக்கையை நீங்களும் பகிர்ந்து கொள்வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உலகின் பலதரப்பு மன்றங்கள் உலகளாவிய உண்மைகளின் மாற்றத்தை பிரதிபலிக்க வேண்டும். இது சம்பந்தமாக, ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலை அதிக பிரதிநிதித்துவப்படுத்துவது அவசியம். இது அதிக சட்டபூர்வமான தன்மையைக் கொடுக்கும். இதன் மூலம் சர்வதேச அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு ஆகியவற்றின் கொள்கைகள் உலகளவில் மதிக்கப்படுகின்ற உலகளாவிய ஒழுங்கை நிலைநிறுத்தும் - என்று அவர் மேலும் கூறினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# 'பாதுகாப்பு எக்ஸ்போ' திருவிழா குஜராத் காந்திநகரில் ஆரம்பம்

வியாழன் அன்று குஜராத்தின் காந்திநகரில் நடந்த 'பாதுகாப்பு எக்ஸ்போ - 2022' என்ற மெகா மூன்று நாள் நிகழ்வில் திரைச்சீலைகள் விலகின. அங்கு 451 புரிந்துணர்வு ஒப்பந்த விடயங்கள், தயாரிப்பு வெளியீடுகள் மற்றும் தொழில்நுட்ப நிலைமாறல்கள் ஆகியவை நாட்டின் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைக்கு மேலும் உத்வேகத்தை அளிக்கின்றன.

இந்த விழாவில் குஜராத் ஆளுநர் ஆச்சார்யா தேவ்வ்ரத் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'பாதுகாப்பு எக்ஸ்போ - 2022' இன்றோடு நிறைவடைகிறது, ஆனால் இந்தியப் பாதுகாப்புத் துறையின் அதிகாரமளிக்கும் இந்த புதிய அத்தியாயம் தொடங்குகிறது என்று ராஜ்நாத் சிங் தனது பாராட்டு உரையில் கூறினார். இது புதிய ஆற்றலுடனும் உறுதியுடனும் முன்னேறும் இந்திய பாதுகாப்புத் துறையின் தன்னம்பிக்கையின் தொடக்கமாகும் என்றார் அவர்.

உலகளாவிய பாதுகாப்பு உற்பத்தியின் மையமாக இந்தியா இருக்கும் என்பதை இந்த மெகா நிகழ்வின் வெற்றி நிரூபித்துள்ளது, என்றார்.




'பாதுகாப்பு எக்ஸ்போ - 2022' இன் 12 ஆவது பதிப்பு சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் இருந்தது. இதில் பல்வேறு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் மூத்த தூதர்கள் கலந்து கொண்டனர். இந்த மெகா நிகழ்வில் கலந்து கொண்ட வணிகத் தலைவர்கள் நிகழ்விற்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

'பாதுகாப்பு எக்ஸ்போவின்' போது, ஸ்டார்ட் - அப் மந்தன், பாதுகாப்புக்கான முதலீடு, இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு உரையாடல் மற்றும் பந்தன் போன்ற நிகழ்வுகள் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்தியப் பெருங்கடல் பகுதி இந்தியாவிற்கு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது. பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களைப் பேண, பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (SAGAR) என்ற யோசனையை பிரதமர் நரேந்திர மோடி முன்மொழிந்துள்ளார். மேலும் தொலைநோக்குப் பார்வையை அடைவதற்காக, இந்தியப் பெருங்கடல் பகுதி மாநாடு நடத்தப்பட்டது, அங்கு பிரதிநிதிகள் முழுமையான ஒத்துழைப்பை உறுதியளித்தனர் என்றார் அவர்.



'பந்தன்' விழாவிற்கு அதன் சொந்த முக்கியத்துவம் உள்ளது, மேலும் 'பாதுகாப்பு ஏற்றுமதி'யின் போது அதிக எண்ணிக்கையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தயாரிப்பு துவக்கங்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற ஒப்பந்தங்களின் கீழ் ம்யூம்நு உடன் வணிக நிறுவனங்கள் செய்யப்பட்டுள்ளன என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது நாட்டின் வளர்ந்து வரும் வலுவான பாதுகாப்பின் விளைவாகும். சுற்றுச்சூழல், என்று அவர் கூறினார்.

'மேக் இன் இந்தியா' மற்றும் 'ஆத்மநிர்பர் பாரத்' ஆகியவற்றுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார். பொருளாதாரத்தை உயர்த்த இந்தியா தன்னிறைவு பெற்றுள்ளது மற்றும் உலகளாவிய விநியோகம் வழ்ச்ங்கும் இலக்கையும் கொண்டுள்ளது என்றார்.

அரசாங்கம் சுயசார்பு மற்றும் பாதுகாப்பு ஏற்றுமதியை அதிகரிக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலக்குகளை அடைவதற்கு நாங்கள் பொது மற்றும் தனியார் பங்காளிகளை ஊக்குவிப்போம். மேலும் 2024 - 25 ஆம் ஆண்டிற்குள் ரூ. 40,000 கோடி பாதுகாப்பு ஏற்றுமதி இலக்கை அடைய இது உதவும். அவர் சொன்னார்.

இந்த நிகழ்வின் வெற்றியானது, தொலைதூரத்தில் இருந்து நிகழ்விற்கு வந்து தங்கள் தயாரிப்புகளை பாதுகாப்பு எக்ஸ்போவில் காட்சிப்படுத்துவதன் மூலம் தங்கள் வணிகத்தை மேம்படுத்திய கண்காட்சியாளர்களுக்கு சொந்தமானது. இந்த நிகழ்வை மாபெரும் வெற்றியடையச் செய்த குஜராத் அரசின் வெற்றி இது" - என்றும் அவர் கூறினார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)



## வடக்கில் சீனாவால்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் சீனாவின் வருகை என்பது இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

இலங்கை சீனாவிற்கு அகலமாகக் கதவுகளைத் திறந்து விட்டுவிட்டு இந்தியா எனது சகோதரன் என்றும் சீனா எனது நண்பன் என்றும் கூறுவது நகைப்புக்குரியது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், சீனாவின் நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. சர்வதேச தளங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் செயற்பட்டு வரும் சீனா, வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதுபோன்றுஒருதோற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே.

வடக்கு மாகாணத்தில் சில நூறு மீனவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்குவதும், பல்கலைக்கழகத்திற்கு சில லட்சம் ரூபாய்களைக் கொடுத்து மாணவர்களின் நலன் பேணுவதும், இவற்றுடன் கடல்அட்டைப் பண்ணைகள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளில் சீன நாட்டின் உளவுப் பிரிவினர் செயற்படுவதாகவும் பேசப்படுகின்றது. இதுதொடர்பில் இப்பொழுது தமிழ் நாட்டிலும் அச்சம் வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழ் நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் வடக்குமாகாணத்தில்சீருடைஅணியாத சீன இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் கடல் அட்டை பண்ணைகள் அமைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் எனவும் தமிழகத்திற்குள் அவர்களது ஊடுருவல் ஏற்படலாம் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர். இதன் காரணமாக தமிழக கடல் எல்லைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டும் என்றும் மத்திய அரசிடம் கோரியிருக்கின்றனர்.

இலங்கைக்குள் சீனாவின் ஊடுருவல் என்பது தமிழ் நாட்டை அச்சம் கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளதாக தமிழகமே கூறும் நிலை உருவாகியுள்ளது. இது இலங்கைக்கு ஆரோக்கியமான ஒரு சூழல் அல்ல. வடக்கு மாகாணத்திற்குள் சீனாவின் சகலவிதமான நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்தத் தவறினால் அது பெரும் பின்விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். நாம் இந்த விடயத்தைத் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வருகின்ற பொழுதிலும் இலங்கை அரசாங்கம் இதனைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் சீனா தொடர்ந்தும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. ஆகவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதிக்காகவும், இலங்கையின் அமைதிக்கும் பாதுகாப்பிற்காகவும் சீனாவின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டியது இலங்கையின் கடமையாகும். - என்று உள்ளது.

## கதிர்காமத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியைச் சேர்ந்த இந்தப் பெண்ணின் சடலம், தற்போது தெபரவெவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாடசாலை தவணைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் டிசம்பர் 5ஆம் திகதி முதல் டிசம்பர்22ஆம்திகதி வரை இடம்பெறும் என்றும் அதன்பின்னர், டிசம்பர் 23ஆம் திகதி முதல், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிவரை நத்தார் பண்டிகைக்காக பாடசாலை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்காக, 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி நிறைவடையும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 16ஆம் திகதி முதல் பெப்ரவரி 28ஆம் திகதிவரை மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்கான விடுமுறை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டத்தை மார்ச் முதலாம் திகதி தொடக்கம், மார்ச் 21ஆம் திகதி வரை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## காங்கேசன்துறையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமாகியது.

யாழில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த ஹயஸ் வாகனம் ஒன்று காங்கேசன்துறை பயணித்த சமயம் திடீரென நெருப்பு வருவதை அவதானித்த சாரதி வாகனத்தை விட்டு இறங்கித் தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்தார். இருந்தபோதும் தீ வேகமாக பரவியது.

தீயை அணைக்க முடியாது தீயணைப்பு சேவைக்கும் தகவல் வழங்கப்பட்டு, அந்த இடத்திற்கு வந்ததீயணைப்பு இயந்திரமும் நீர்ப் பிரயோகம் செய்து தீயைக் கட்டுப்படுத்திய போதும் வாகனம் பாரிய அளவில் எரிந்து சேதமடைந்து விட்டது.

வாகனத்தில் மின்சார இணைப்பில் ஏற்பட்ட கசிவு காரணமாகவே இந்தத் தீவிபத்து ஏறபட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

## வரவு - செலவுத் திட்டம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத்திட்டம் மீதான விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபைத் தலைவர் சுசில் பிரேம ஜயந்தவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

## கூட்டமைப்பில் 6 பேர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 உறுப்பினர்களில் 6 பேரே பங்கேற்றனர்.

வாக்கெடுப்பில் கலந்துகொண்ட சிவஞானம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், தவராசா கலையரசன் ஆகியோர் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இரா. சாணக்கியன் எம்.பி. வெளிநாடு சென்ற காரணத்தால் நேற்று சபைக்கு வரவில்லை.

அதேவேளை, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், எஸ்.வினோநோகராதலிங்கம் எம்.பியும் சுகயீனம் காரணமாக நேற்று சபைக்கு வரவில்லை.






# வரிச்சலுகைகளை வழங்கிய கோட்டாவிற்கு என்ன நேர்ந்தது? வரிகளை அறவிடாவிட்டால் நாட்டு நிலைமை படுமோசமடையும்

## அலி சப்ரி இப்ப இப்படிக் கூறுகிறார்



நாங்கள் சிறந்த அரசாங்கம் என்று காண்பிப்பதற்காக வரிச்சலுகைகளை வழங்கலாம். ஆனால் வரிச்சலுகைகளை வழங்கிய கோட்டாபய ராஜபக்ஷவிற்கு என்ன நேர்ந்தது? 2 கோடியே 20 லட்சம் சனத்தொகையைக்கொண்ட இலங்கையில் வெறுமனே 40 ஆயிரம் பேர் மாத்திரமே வரி செலுத்தினால், அதனூடாக நாட்டை எவ்வாறு நிர்வகிக்க முடியும்? ஆகவே தற்போது நாட்டுக்கு வரிச் சலுகைகளா அல்லது பொருளாதார ஸ்திரத்தன்மையா தேவை என்று சிந்தித் துப் பார்க்க வேண்டும்.

அதன்படி இப்போது வரிகளை அறவிடாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையும். இந்தப் பொருளாதார நெருக் கடியைக் கையாள்வதற்கான உடனடி நடவடிக்கையாக வரி அறவீட்டை மேற் கொள்ள வேண்டியிருக்கின்றது. இது கசப்பான மருந்தாக இருந்தாலும், இதனை அருந்த வேண்டிய நிலையில் இருக்கின் றோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலின்போது சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்வதில் தொடரும் தாமதம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைவாக வரி அறவீட்டை மேற்கொள்வதால் மக்கள்மீது மேலும் அதிகரிக்கும் சுமை என்பன பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

‘நீங்கள் தற்போது பாரிய நெருக்கடியில் இருக்கின்றீர்கள். இதிலிருந்து மீள்வதற்கு உடனடியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடுங்கள்’ என்றே அனைத்துத் தரப்பினராலும் கூறப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தை நாடியதன் பின்னரே உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஆகியன இணைந்து 70 கோடி டொலர் பெறுமதியான இலகு கடனுதவியை எமக்கு வழங்குவதற்கு முன்வந்தன.

அதனூடாகவே எரிவாயு, எரிபொருள் ஆகியவற்றுக்கான வரிசைகளை இல்லாமல் செய்யவும், உரத்தை விநியோகிக்கவும், பொருளாதார நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதாந்தம் குறித்தளவு நிவாரணத் தொகையை வழங்கவும் முடிந்தது.

அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளும் முதலில் சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு எம்மை வலியுறுத்தின.

அதேவேளை எந்தவொரு நாடும் தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை வீதம் வரியாக அறவிடப்படவேண்டும் என் பது தொடர்பாகக் கணிப்பீடொன்றைக் கொண்டிருக்கும். அதன்படி இங்கிலாந் தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 33 சதவீதமானவை வரியாக அறவிடப்படுகின்றன.

இருப்பினும் இலங்கையைப் பொறுத்தமட்டில் 1981 ஆம் ஆண்டில் 21 சதவீதமாகக் காணப்பட்ட வரி அறவீடா வது 2019 ஆம் ஆண்டில் 14.5 சதவீத மாகக் குறைவடைந்து, இப்போது 8.3 சத வீதத்துக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது. இவ்வாறான தொரு பின்னணியில் நாம் நாட்டை முன் னேற்றப்பாதையில் கொண்டு செல்ல முடியாது.

இந்த நிலை தொடர்ந்தால் சுமார் 15 லட்சம் அரச ஊழியர்களுக்கான ஊதியத்தை எவ்வாறு செலுத்தமுடியும்? ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை எவ்வாறு செலுத்த முடியும்? எவ்வாறு குறைந்த விலைக்கு உரத்தை வழங்கமுடியும்? எவ்வாறு இலவசக்கல்வியையும், இலவச சுகாதார சேவையையும் வழங்கமுடியும்? 1991 ஆம் ஆண்டில் இந்தியா இதனை யொத்த நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. அதன் விளைவாக அங்கு அரச ஊழியர்களுக்கான ஓய்வூதியக்கொடுப்பனவு இல்லாமல் செய்யப்பட்டது. தனியார் மயமாக்கலின் ஊடாக டொலர் உட்பாய்ச் சல் ஊக்குவிக்கப்பட்டது.

எனவே இந்தச் செலவினங்களை ஈடுசெய்யவேண்டுமெனில், முதலாவது தெரிவாகப் பணத்தை அச்சிடவேண்டும். இல்லாவிட்டால் வரிகளை அறவிட வேண்டும். பணத்தை அச்சிட்டதன் விளைவாகவே பணவீக்கம் அதிகரித்து, டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து தற்போதைய நெருக்கடி தோற்றம்பெற்றிருக்கின்றது.

எனவே பணத்தை அச்சிடமுடியாது. அதேபோன்று நாங்கள் சிறந்த அரசாங்கம் என்று காண்பிப்பதற்காக வரிச்சலுகைகளை வழங்கலாம். ஆனால் வரிச் சலுகைகளை வழங்கிய கோட்டாபய ராஜபக்ஷவிற்கு என்ன நேர்ந்தது? 2 கோடியே 20 லட்சம் சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் வெறுமனே 40 ஆயிரம் பேர் மாத்திரமே வரி செலுத்தினால், அதனூடாக நாட்டை எவ்வாறு நிர்வகிக்க முடியும்? ஆகவே தற்போது நாட்டுக்கு வரிச் சலுகைகளா அல்லது பொருளாதார ஸ்திரத்தன்மையா தேவை என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்த ஒருவருடம் மிகவும் கடினமானதாகவும், கசப்பானதாகவுமே அமையும். ஆனால் வரிகளை அறவிடாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையும். இதற்கான மாற்றுவழி என்ன? ஏற்றுமதியை மையப்படுத்திய பொருளாதாரத் தைக் கட்டியெழுப்பவேண்டும். இருப்பினும் அதனை ஓரிரு தினங்களில் செய்ய முடியாது.

ஆகவே இந்தப் பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதற்கான உடனடி நடவடிக்கையாக வரி அறவீட்டை மேற்கொள்ளவேண்டியிருக்கின்றது. இது கசப்பான மருந்தாக இருந்தாலும், இதனை அருந்தவேண்டிய நிலையில் இருக்கின்றோம் என்று சுட்டிக்காட்டினார்.

# நிறைவேற்று அதிகாரம் மட்டுப்படுத்தும் வகையில் 22 ஆவது திருத்த வரைவு சமர்ப்பிக்கப்படவில்லை!

## சந்திம வீரகொடி சுட்டிக்காட்டு



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் வகையில் அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவு சமர்ப்பிக்கப்படவில்லை. அரசமைப்பு திருத்தம் என குறிப்பிட்டுக் கொண்டு ஒரு சில விடயங்கள் மாத்திரமே காலம் காலமாக திருத்தப்படுகிறது என சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீர கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவு மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாடாளுமன்றம்,நாடாளுமன்ற முறைமை மற்றும் அரசியல் கட்டமைப்பு ஆகியவற்றை நாட்டு மக்கள் முழுமையாக வெறுக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. நாட்டின் அபிவிருத்தி, ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல் மற்றும் ஊழலற்ற அரசாங்கத்தை முன்னெடுத்தல் ஆகியவற்றை இலக்காக கொண்டு நாட்டு மக்கள் தமக்கான பிரதிநிகளைத் தெரிவு செய்கிறார்கள்.

இரண்டாம் குடியரசு திருத்தம் இது வரை 20 முறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முழுமையாக இல்லாதொழிப்பதாகத் தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கப்படுகிறது.

ஆனால் அரசமைப்பு திருத்தம் என்ற பெயரில் ஒருசில விடயங்கள் மாத்திரம் திருத்தம் செய்யப்படுகிறது. இதுவே காலம் காலமாக இடம்பெறுகிறது, நாட்டு மக்களும் ஏமாற்றப்படுகிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பலவீனமான அரசாங்கத்துக்கும் எதிராக நாட்டு மக்கள் கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்னர் வீதிக்கிறங்கிய போது அரசாங்கம் 20ஆவது திருத்தத்தை நீக்கி, அரசமைப்பை திருத்தம் செய்ய அவதானம் செலுத்தியது.

அந்தக் காலப்பகுதியில் நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்பட்ட தற்போதைய நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ உண்மை நோக்கத்துடன் அரசமைப்பு திருத்தத்துக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

ஆனால் தற்போது அவரால் கூட உண்மைத் தன்மையுடன்,மக்கள் எதிர்பார்ப்புக்கு அமைய அரசமைப்பு திருத்தத்தை உருவாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதே உண்மை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் வகையில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள 22 ஆவது திருத்தச் சட்டமூல வரைவில் எவ்வித ஏற்பாடுகளும் உள்வாங்கப்படவில்லை.

அரசமைப்பு திருத்தம் ஊடாக எந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்பட்டது என்பது கேள்விக்குறியானதே. – என்றார்.

# எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் சிதைவுகளை அகற்ற சீனக் கப்பல் நாட்டை வந்தடைவு!

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலின் சிதைவுகளை அகற்றுவதற்காக சீனக் கப்பல் ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) காலை நாட்டை வந்தடைந்தது.

கடந்த வருடம் மே மாதம் 20 ஆம் திகதி நீர்கொழும்பு துறைமுகத்துக்கு அருகிலும் அதனை சூழவுள்ள கடற்பரப்பிலும் எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தீப்பற்றி எரிந்தது.

இந்த தீ விபத்து காரணமாக அந்த கப்பலில் இருந்த கொள்கலன்கள் உட்பட சுமார் 1700 மெற்றிக் தொன் சிதைவுகள் கடலில் கலந்துள்ளன.

இந்தநிலையில் கப்பலின் சிதைவுகளை அகற்றுவதற்காக சீனக் கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதாக கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பாட்டும் நானே? .......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**உலகநாதரின் ஒப்பீனியன் * இந்த மனிதன் என்னப்பா எல்லாத்தைப் பற்றியும் தெளிவாய்ப் பேசுது! வாரிதியார் சகலகலாவல்லவன் தான் போல.**

**3. கேள்வி:-** ஒரு நல்ல சமூக சேவகனுக்குஇருக்கவேண்டியபண்புகள்எவை?

**பதில்:-** நான் எனும் ஆணவம் தள்ள வேண்டும்.

இந்த ஞாலத்தைத் தான் எனக்கொள்ள வேண்டும்.

மோன நிலையில் இருக்கவேண்டும்.

இவை நான் இனங்கண்டு சொல்லும் பண்புகள் அல்ல, பாரதியாரால் சொல்லப்பட்டிருக்கும் பண்புகள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ஆரங்கே? ஒரு பூதக் கண்ணாடி கொண்டு வாருங்கள்.**

**இப்படியும் சமூக சேவகர்கள் இருக்கிறார்களா? என்று தேடிப் பார்ப்போம். ஹி.. ஹி..**

**4. கேள்வி:-** என்ன வாரிதியாரே! கொஞ்சநாள்களாய் பரபரப்பான அரசியல் கேள்வி, பதில்களைக் காணோமே?

**பதில்:-** நாட்டு அரசியலும், இன அரசியலும் கொஞ்சநாளாய் ‘சவுத்துப் போய்’த்தான் இருக்கிறது. அதனால்த் தான் அரசியல் கேள்விகள் வருவதில்லைப்போல. கேள்வி வந்தால்த்தானே பதில் எழுத.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் சொல்லுறது நிசம் தானுங்கோ.**

**5. கேள்வி:-** ரணிலுக்கு எதிராகப் போராட்டங்கள் வெடிக்கப் போவதாய் இணையத்தளச் செய்திகள் மிரட்டுகின்றனவே. நடக்குமா?

**பதில்:-** வாசிக்கச் செய்யவேண்டும் என்பதற்காக, இணையத்தளக்காரர்கள் எள்ளை இமயமாய்க் காட்டுகிறார்கள். நனைந்த பட்டாசுகள் பெரும்பாலும் வெடிப்பதில்லை. அதுபோலத்தான் இணையத்தளச் செய்திகளும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * உலக நாடுகளின் கவனம் முழுவதும் ரஷ்யா, உக்ரெயின் பக்கம் திரும்பிவிட்டதால், இங்க வெடி கொளுத்திப்போட ஒருவரும் இல்லப்பாருங்கோ. ஹி..ஹி..**

**6. கேள்வி:-** டீசல் இல்லை, பெற்றோல் இல்லை, காஸ் இல்லை என்று மக்கள் எல்லாம் வீதியில் இறங்கிப் போராடினார்கள். பதவி ஏற்றதும், ரணில் அந்தச் சூழ்நிலையை முற்றாய் மாற்றிவிட்டாரே! அது எப்படி?

**பதில்:-** அதுதான் அனுபவத்தின் வலிமை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘புத்திமான் பலவான்’**

**7. கேள்வி:-** சூரன்போர் நடக்குமா? (நான் கோயில்களில் சொல்லுகிறேன்.)

**பதில்:-** நடக்கவேண்டும். (நான் கோயில்களில் சொல்லவில்லை.)

**உலகநாதரின் ஒப்பீனியன் * இவர் ஆரைச் சூரன் என்கிறார்? ஆரை முருகன் என்கிறார்?**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.10.2022இல் வெளியிடப்பெற்றது.